Registered at the G. P. O as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண் 49

மலர் 4 யாழ்ப்பாணம், பிலவ பங்குனி 17 ஆம்நாள் ஷவ்வால் 23 (30-3-62) வெள்ளிக்கிழமை இதழ் 48

வாசனை உலகில் ஓர் புரட்சி!
33
இன்பம் தரும் 303 பத்திகளை
3003
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
சென்னை பெங்களூர்-2 மதுரை

# சதிவழக்கை தாமதிக்க விரும்பவில்லை

## கெனமன் கேள்விக்கு பீலிக்ஸ் பதில்

### முடிக்குரிய வழக்கறிஞர்கள் வழக்கைத் தயாரிக்கின்றனர்

கொழும்பு, வியாழன்

"தோல்வியில் முடிவடைந்த புரட்சிச்சதி சம்பந்தமான வழக்கு விசாரணைக்கான ஏற்பாடுகளை முடிக்குரிய வழக்கறிஞர்கள் துரிதப்படுத்தி இதுவரை நடைபெற்ற அலுவல்களைக் கெடுத்துக்கொள்ள நான் விரும்பவில்லை" என்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. பீலிக்ஸ்ஆர். டயஸ் பண்டாரநாயக்கா இன்று பார்லிமெண்டில் தெரிவித்தார்.

சதி வழக்கு விசாரணைகள் எப்பொழுது ஆரம்பமாகும் என்பதுபற்றிய உத்தியோக பூர்வமான அறிக்கையொன்று வெளியிடப்படுமா? என்று கம்யூனிஸ்ட் கட்சியைச்சேர்ந்த திரு. பீட்டர் கெனமன் கேட்டதற்குப் பதிலளிக்கையிலேயே திரு. பீலிக்ஸ் டயஸ்பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சதி வழக்கு விசாரணை சம்பந்தமாக நீதியமைச்சர் செனட் சபையில் விடுத்த அறிக்கை தெளிவில்லாமலிருப்பதால் இது சம்பந்தமாக உத்தியோகபூர்வமான அறிக்கைவெளியிடவேண்டியது அவசியமென்று திரு. கெனமன் கூறினார். சதி வழக்கு விசாரணை ஆரம்பமாவதற்கு இன்னும் இரண்டுமாதமோ அல்லது ஐந்துமாதங்கள்கூடச் செல்லலாமென்று பத்திரிகைகளில் வெளியான செய்திகளிலிருந்து தோன்றுகிறதென்றும் திரு. கெனமன் குறிப்பிட்டார்.

இதற்கு திரு பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா பதிலளிக்கையில் கூறியதாவது

சதிவழக்கு விசாரணை சம்பந்தமாக சிரேஷ்ட முடிக்குரிய வழக்கறிஞர் திரு. ஆனந்த பெரேராவுடனும் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. டிட்டவலவுடனும் நான் நேரடியாகப் பேசினேன்.

பதினொரு அத்தியாயங்கள் கொண்ட தஸ்தாவேஜுகளில்

(5-ம் பக்கம் பார்க்க)

இளம்பிள்ளைவாதநோய்

## யாழ்ப்பாணத்தில் ஒரு குழந்தை பலி

யாழ்ப்பாணம், வெள்ளி.

இளம்பிள்ளை வாதநோய்க்கு யாழ்ப்பாணத்திலும் ஒரு குழந்தை பலியானது.

இளம்பிள்ளை வாதநோயால் பீடிக்கப்பட்ட நான்கு குழந்தைகள் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இக்குழந்தைகளில் ஒன்று மரணமானது.

இளம்பிள்ளை வாதநோயினால் பீடிக்கப்பட்ட மற்றுமிரு குழந்தைகள் நேற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தநோயைக் கட்டுப்படுத்துவதில் டாக்டர் எம். வி. ஜே. ஹண்ட்டும் மற்றும் அவரது உதவியாளர்களும் தீவிர முயற்சிசெய்துவருகின்றனர்.

இளம்பிள்ளைவாதநோய் தடுப்பு மருந்துகள் குறிப்பாக அதிசயமான ரஷ்ய ஊட்ட மருந்துகள் பற்றாக்குறையாக இருப்பதால் யாழ்ப்பாணம் ஆஸபத்திரி அதிகாரிகள் கஷ்டமடைவதாகக் கூறப்படுகிறது. கைவசமுள்ள தடுப்பு மருந்துகள் இந்தநோயினால் பீடிக்கப்பட்ட சில குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இளம்பிள்ளை வாதநோய் தடுப்புமருந்து கிடைக்காத ஆஸ்பத்திரி உத்தியோகஸ்தர்களிடையில் பீதி நிலவுகிறது.

கொழும்பில் பாடசாலைகள் மூடப்பட்டதுதான் யாழ்ப்பாணத்தில் இந்த நோய் பரவுவதற்குக் காரணமென்று இங்கு பொதுவாக அஞ்சப்படுகிறது

## வானொலி டைரக்டர் பொலிசில் புகார்

### கொலை செய்வதாக அதிகாரிகள் பயமுறுத்தினர்களாம்

கொழும்பு, வியாழன்

இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பின் ஆங்கிலப் பகுதி நிகழ்ச்சிகள் இன்று முக்கால மணிநேரம் தடைப்பட்டது. வெலிக்கடையிலுள்ள 'டிரான்ஸ் மீட்டரி'ல் ஏற்பட்ட கோளாறு தான் இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில் இலங்கை வானொலியின் இலாகாத் தலைவர்கள் சிலரும் உயர்தர அதிகாரிகள் சிலரும் தன்னைப்பய முறுத்தியுள்ளதாக இலங்கை வானொலி டைரக்டர் ஜெனரல் திரு. ரொனி டி மெல் குற்றம் சாட்டியுள்ளார். கறுவாக்காடு பொலிஸில் செவ்வாய்க்கிழமை இரவு திரு. டி மெல் புகார் செய்துள்ளார்.

வானொலி டைரக்டர் ஜெனரலைக் கொலைசெய்வதாகப் பயமுறுத்தியதாகப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளதாகவும் இதுபற்றித் தாங்கள் பொலிசாரால் விசாரணைசெய்யப்பட்டதாகவும் இக்குற்றச் சாட்டுக்களைத் தாங்கள் மறுத்துள்ளதாகவும் பிரஸ்தாப உத்தியோகஸ்தர்கள் இன்று தெரிவித்தனர்.

## கிழக்கு மாகாணத்தில் மீன்பிடித் தொழில் விருத்தி

### எஸ். ஜே. வி. கூட்டும் முக்கிய மகாநாடு

கொழும்பு, வியாழன்

கிழக்குமாகாணத்தில் மீன்பிடித்தொழிலை அபிவிருத்தி செய்வது சம்பந்தமான முக்கிய மகாநாடொன்றை தடை செய்யப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியின் தலைவரும் காங்கேசன் துறை எம். பி. யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூட்டவிருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தில் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கும் மீன்பிடித்தொழிலாளர்களுக்கு வடமாகாணத்திலுள்ள அனுபவம் வாய்ந்த மீன்பிடியாளர்களைக் கொண்டு பயிற்சியளிப்பதற்கான வழிவகைகள்பற்றி இந்த மகாநாடு ஆராயும்.

நவீன யந்திரப்படகு மூலம் மீன்பிடிப்பது, மீன் பழுது போகாமல் பதனிடுவது, மீன்களைச் சேமித்துவைப்பது, ஏற்றுமதியை அதிகரிப்பது ஆகிய துறைகளின் அபிவிருத்திபற்றி இந்த மகாநாடு ஆராயும்

கிழக்கு மாகாணத்திலுள்ள மீன்பிடிச்சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், மீன்பிடியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவைகள் இந்த மாநாட்டுக்கு அழைக்கப்பட்டுள்ளன

## உப்பு விலை அதிகம்; கருவாடு கிடையாது!

### பார்லிமெண்டில் காலி எம். பி. புகார்

### "உணவுப் பொருள் தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடும்"

— உணவுமந்திரி

கொழும்பு, வியாழன்

உணவுப் பொருட்களுக்கு இப்பொழுதுள்ள தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடுமென்று உணவு வர்த்தக அமைச்சர் இன்று பார்லிமெண்டில் கூறினார்.

வர்த்தகர்கள் தங்கள் கடைகளிலுள்ள சாமான்களின் விபரப் பட்டியலைக் கடைகளில் தொங்கவிட வேண்டுமெனக் கோரும் ஷரத்துக்களைச் சேர்க்கவேண்டுமென்ற பிரேரணையை வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டுவந்தார்.

காலி எம். பி. திரு. டபிள்யு. தகநாயக்கா பேசுகையில் ஒரு இருத்தல் பருப்பு 36 சதமாக உயர்ந்துவிட்டதாகவும் சகல விதமான கருவாடுகளும் கிடைப்பதில்லையென்றும் இருந்தாலும் அவைகளுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுகிறதென்றும் தெரிவித்தார்.

வத்தளை எம். பி. திரு. ஷெல்டன் ஜயசிங்கா பேசுகையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்றார். புளிக்குக்கூட பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்றுகூறிய திரு. ஜயசிங்கா உணவுப்பொருள்கள் கிடைக்கக்கூடிய இடங்களில் அப்பொருள்களின் விலை கட்டுப்பாட்டுவிலைக்கு பெரிதும் அப்பாற்பட்டதாக இருக்கிறதென்றார்.

"இன்றுள்ள இந்த நிலைமையைச் சீர்செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்பதை அறியவிரும்புகின்

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு செல்வன் யோகநாதன் சரவணமுத்துவின் சிப்பிக் கண்காட்சியை நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. திறந்துவைப்பார்.

## ஆர்ஜன்டினு அதிபர் கைது

புவனஸ்அயர்ஸ், மார்ச் 29

ஆர்ஜன்டினு ஜனாதிபதி பிரண்டீஸியை ராணுவத்தினர் பதவிநீக்கம் செய்ததுடன் கைதுசெய்து காவலில் வைத்துள்ளனர். ஆட்சிப்பொறுப்பை எடுத்துக்கொண்ட முப்படைத் தளபதி நாட்டின் நிர்வாகப் பொறுப்பை செனட் தலைவரிடம் ஒப்படைத்துள்ளார்.

விரைவில் சர்வகட்சி அரசாங்கம் நாட்டை ஆட்சிசெய்யும் என்று ராணுவத் தலைவர்கள் விடுத்த ஒரு அறிக்கையில் தெரிவித்தனர்.

## வரி விளம்பரம்

### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு–குத்தகைக்கு

யாழ்ப்பாணம் பெரியகடையில் மோட்டார் வாகனங்கள் திருத்தும் பிரசித்திபெற்ற வேலைத் தளம். திறமை மிக்க வேலையாட்கள் பலரின் சேவை கிடைக்கும். மோட்டார் திருத்த வேலைகளுக்குத் தேவையான சகல வசதிகளும் இங்குஉண்டு. இது விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: Gx 43, C/o. ஈழநாடு, தபாற்பெட்டி எண், 49. யாழ்ப்பாணம்.


## மட்டக்களப்பிலும் இளம் பிள்ளை வாத நோய்

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்பு பகுதியிலும் ஒருவருக்கு இளம்பிள்ளை வாத நோய் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டு இவர் மட்டக்களப்பு மாகாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பில் தங்கியிருந்த காலத்தில், இவரது சகோதரன் ஒருவனுக்கு இந்நோய் இருந்ததாகவும் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்த நவரை டாக்டர்கள் மிகுந்த கவனத்துடன் கண்கணித்து வருகிறார்கள்.

---

## வரட்சியின் பின் நல்ல மழை

காத்தான்குடி, வியாழன்

இப்பதியில் நிலவிய நீண்ட வரட்சி மாறி நல்லமழை இடி முழக்கத்துடன் பெய்தது. தொடர்ந்தும் மழைபெய்தற்குரிய அறிகுறிகள் தென்படுகின்றன. இந்தமழை காரணமாக வேளாண்மை அறுவடை வேலைகள் தடைப்பட்டுள்ளன.


## பிரதேச கலைமன்றம்

**யாழ்ப்பாண**

யாழ்ப்பாணத்திலுள்ள் நாடக சபைகள், இசைக் கல்லூரிகள், நடனக் கல்லூரிகள் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெறுவதற்குப் பிரதேசக் கலை மன்றத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும். இப்படிப் பதிவு செய்ய விரும்பும் சபைகளும் கல்லூரிகளும் மனுப்பத்திரங்களை 20-4-62க்குமுன் அனுப்பிவைக்கவும். மனுப்பத்திரங்களில் பூரண விபரங்களையும் கொடுக்கவும்.

யாழ்ப்பாணப் பிரதேச நாடகப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் சபைகள் (amateurs) 20-4-62க்கு முன் மனுச் செய்யவும்.

இங்ஙனம்,
ச. அம்பிகைபாகன்,
காரியதரிசி,
பிரதேச கலைமன்றம்.

வைத்தீஸ்வர வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.
20-3-62.





இன்றே எழுதி
ராணி பரிசுத் திட்டப்
பக்கங்களைப் பெறுங்கள்

### ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்திற்கு

சருமத்தின் இரகசியங்களை நவீன விஞ்ஞானம் அறிந்து வைத்திருக்கிறது. ராணிசந்தன சோப்பை உபயோகித்தீர்களானால், ரோஜா மலர் போன்ற மிருதுவான சருமத்தை நீங்களும் பெறலாம். ராணி சோப், சருமத்தை ஊடுருவிச் சுத்திகரித்து சகல அழுக்குகளையும் வெளியேற்றுகிறது. பின்னர், ஆரோக்கியத்தை விருத்தி செய்யும் இயற்கையான எண்ணெய் வகைகள் மூலம், சருமத்தை மிருதுவாக்குகிறது. அழகின் இரகசியம் சருமத்தைஊடுருவிச்சுத்திகரிக்கும் சோப். ராணி, அதற்கென வே உருவான சோப்.



## ராணி சந்தன சோப்

ஸ்ரீ இண்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட்
தபாற் பெட்டி 21, கொழும்பு


## உங்கள் தினப்பலன்

-சோதிட ஆசான் செ. தெல்லியூர்-

பிலவ ஆண்டு பங்குனிமாதம் 17-ந் திகதி வெள்ளிக்கிழமை (30-3-62) மாலை 3-06 வரை நவமி. பின் தசமி. பின்னிரவு 1-20 வரை உத்தராடம். பின்னர் திருவோணம், சித்தயோகம். பொதுவாக வழமையான கருமங்களைச் செய்வது விசேடமாகும். தெய்வ வழிபாடு பயன் தரும்.

### இன்று பிறந்தவர்களுக்கு

இவர்களுக்கு சொத்துக்களால், தொழில்களால் வருவாய் கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தில் விசேஷமுண்டு. மதிப்புயரும். பெண்களுக்கு சுபகருமங்களுக்கு இடமுண்டு. தேகாரோக்கியம் நிதானமாக இருக்கும். புதிய பதவிகள், பொருள் வரவு, போட்டிகள் ஒழிதல், தொழில் வெற்றி ஆதியன காணப்படுகின்றன.

### நட்சத்திரப் பலன்

அச்சுவினி: பிதுருசிந்தை, பணமுடை.

பரணி: வித்தியாபிவிருத்தி, குடும்பநன்மை.

கார்த்திகை: காரியதடை, பெரியோர் தொடர்பு.

ரோகிணி: கடன்வரவு, தேக நலக்குறைவு.

மிருகசீரிடம்: பிரயாணசுகம், சுபசெய்தி.

திருவாதிரை: தொழிற் சிந்தனை, வீண்பிரயாணம்.

புனர்பூசம்: நல்லோர் ஆதரவு, வாக்குசாதுரியம்.

பூசம்: தெய்வஉதவி: பெண்களால் கஷ்டம்.

ஆயிலியம்: மதிப்புயர்ச்சி, குடும்பசுகம்.

மகம்: பிதுருவழி சிந்தனை, பிரயாணக்கஷ்டம்.

பூரம்: வித்தைச்சிறப்பு, நல்லோர் தொடர்பு.

உத்தரம்: தொழில்முயற்சி, எதிர்ப்புநிலை காணல்.

அத்தம்: பூமிசிந்தனை, பெண்கள் உதவி.

சித்திரை: சுபசெய்தி கேட்டல், குடும்பசுகம்.

சுவாதி: தொழிற்சிந்தை, பணமுடை.

விசாகம்: வாக்குவெற்றி, தனச்சேர்க்கை.

அனுஷம்: தெய்வவழிபாடு, சுகம்.

கேட்டை: நல்லோர் சேர்க்கை, குடும்பசுகம்.

மூலம்: பிதுருவழி நிறைவு, பணமுடை.

பூராடம்: முதியோர் சிந்தனை, அறிவுவளர்ச்சி.

உத்தராடம்: பொருள்வரவு, மதிப்புயர்ச்சி.

திருவோணம்: உட்டணரோகம், பணச்செலவு

அவிட்டம்: பணமுடை, எதிரிகளால் தொல்லை.

சதயம்: கலைவளர்ச்சி, தனதான்ய சேர்க்கை.

பூரட்டாதி: குடும்பயோசனை, தொழிற்சிந்தனை.

உத்தரட்டாதி: தனதான்ய சேர்க்கை, புகழ்.

ரேவதி: தேக நலக்கேடு, வைத்தியச் செலவு அதிகரிப்பு.

---

## மட்டக்களப்பில் மழை

மட்டக்களப்பு, புதன்

மட்டக்களப்புப் பகுதியில் கடந்த ஒருவாரமாக கடும்வரட்சி நிலவி வந்த போதிலும் கடந்த இரண்டு நாட்களாகத் தீடிரெனமழைபெய்ய ஆரம்பித்துள்ளது.

இரவுபகலாகத் தொடர்ந்து மழை பெய்வதோடு, எந்நேரமும் மப்பும் மந்தாரமாக மாரிகாலம் போல காட்சியளிக்கிறது.

எதிர்பாரத விதத்தில் தீடீரென மழை பெய்ய ஆரம்பித்ததால் அறுவடையில் தீவிரமாக ஈடுபட்டுவந்த விவசாயிகள் பெரும்கலக்க மடைந்துள்ளனர்.

# கொல்லப்பட்ட மிருகங்களில் முத்திரை பொறிக்க சிபார்சு

## மாட்டிறைச்சிக்கடைகள் மீது மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், புதன்

கொல்களத்திலிருந்து இறைச்சிக் கடைகளுக்கு கொண்டு செல்லப்படும் கொல்லப்பட்ட மிருகங்களில்முத்திரைபொறிப்பதற்கும்கொல்லப்பட்டமிருகங்களின் தலைகளில் முத்திரை பொறிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளையும், ஒரு இறைச்சிக் கடையிலிருந்து மற்றோர் இறைச்சிக் கடைக்கு கொல்லப்பட்ட மிருகங்கள் கொண்டு செல்வதற்கும் தடைசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் சுகாதார வைத்திய அதிகாரி எடுக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதாரக்குழு சிபார்சு செய்துள்ளது.

டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் இக்குழுவின் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

எருமைகள் இறைச்சிக்காக கொல்லப்படும்வழக்கமொன்று ஒழுங்காகக் கள்ளத்தனமாய் நடைபெறுகிறதென்றும், இந்த எருமை இறைச்சி மாட்டிறைச்சியுடன் கலக்கப்பட்டு நகரில் உள்ள அநேக மாட்டிறைச்சிக் கடைகளில் விற்கப்படுவதாகவும் கூறிய திரு அ. யோ இராஜசூரியர் இப்படியான அபாயத்தை வரியிறுபோரின்சுகாதாரத்தை முன்னிட்டு, உடனடியாக நிறுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வற்புறுத்தினர்.

மாட்டிறைச்சிக் கடைகளுக்கு விற்பனவுக்காகஎருமை இறைச்சி போய்ச் சேருவதை தடைசெய்ய உடனடியாக ஏற்ற நடவடிக்கைகள்எடுக்கப்படவேண்டுமெனவும் சுகாதார வைத்திய அதிகாரியும், மாநகரசபை ஆணையாளரும், சுகாதாரக் குழுத் தலைவரும் காலாகாலத்தில், இந்த மாட்டிறைச்சிக் கடைகளைப் பார்வையிடவேண்டுமென்றும் சிபார்சு செய்யப்பட்டது.

வெள்ளிக்கிழமைகளில் இறைச்சிக் கடைகளை சுகாதார வைத்திய அதிகாரி பார்வையிட வேண்டுமெனவும், கொல்லப்பட்ட மிருகங்கள் கொண்டு செல்லும்பொழுது துத்தநாகத் தகடால் செய்யப்பட்ட மூடியுள்ள பெட்டிகள் பாவிக்கப்பட வேண்டுமெனவும் சிபார்சு செய்யப்பட்டது.

---

# கல்லோயா சபையை ரத்துச் செய்யவேண்டும்

## பிரதமரிடம் எம். பி. கோருவார்

கொழும்பு, புதன்

கல்லோயா அபிவிருத்தி சபையை ரத்துச் செய்யும்படி பிரதமரை தாம் கேட்டுக்கொள்ளப்போவதாக அம்பாறை எம். பி. திரு. இந்திரசேனடி' சொய்சா கூறியுள்ளார்.

கல்லோயா சபை கடந்த 12 வருட காலமாகச் செயலாற்றிய வகையை ஆராய்வதற்கு ஒரு கமிஷனை நியமிக்கும்படி காணி அமைச்சரையும் பிரதமரையும் தாம் கேட்டுக்கொள்ளப்போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

சபையை ரத்துச்செய்துவிட்டு 15,000 தொழிலாளருக்கும் மகாவலித் திட்டம், வளவைத் திட்டம் போன்ற தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் வேலை வழங்கவேண்டும் என அவர் யோசனை தெரிவித்துள்ளார். கல்லோயா சபைக்கு செலவிடப்படும் 7 கோடி ரூபாயும் வீண் செலவு என்றும் அதை வேறு தேசிய அபிவிருத்தித் திட்டத்துக்கு உபயோகிக்கலாம் என்றும் அதனாலேயே கல்லோயாத் திட்டத்தை ரத்துச் செய்யும்படி தாம் பிரதமரைக் கேட்கப்போவதாகவும் திரு. சொய்சா கூறியுள்ளார்.

கல்லோயாப் பள்ளத்தாக்குக்கு ஒரு சபை வேண்டியதில்லையென்றும், மக்களின் நிலைமைகளைச் சீராக்குவதற்கு ஸ்தலஸ்தாபன சபைகள் மட்டுமே அவசியம் தேவையென்றும் திரு. சொய்சா கூறியுள்ளார்.

---

## சாஸ்திரி குணமடைந்தார்

புதுடில்லி, மார்ச் 27

சமீபத்தில் காயமடைந்த இந்திய உள் விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி அநேகமாக பூரண குணமடைந்துள்ளார் என்றாலும் இரு வாரங்களுக்கு பூரண ஓய்வு பெறவேண்டுமென்று டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

## சைவசமயபாட வகுப்பு

காத்தான்குடி, வியாழன்

சைவசமய இளைஞர்களின் அறிவுவளர்ச்சிக் குறித்து, இந்து பரிபாலன சபையும், அருள்நெறித் திருக் கூட்டத்தினரும் ஓர் சமயபாட வகுப்பை நடத்திவருகின்றன. ஜி. சி. ஈ. வகுப்புப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வகுப்பு நடைபெறுகிறது. ஞாயிறு தோறும் நடைபெறும் இவ்வகுப்பில் மட்டக்களப்பு, கல்லடிஉப்போடை, ஆரையம்பதி, கோட்டைமுனை ஆகிய இடங்களைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

பண்டிதர் செ. பூபாலபிள்ளை பண்டிதர் எஸ். கனகசூரியம் திரு. வீ. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் போதகாசிரியர்களாகப் பணிபுரிகிறார்கள்,

---

## கூ. மொ. வி. ஸ்தாபனத்திலும் உப்பு தட்டுப்பாடு

கோட்டே, வியாழன்

கொழும்பு முதலியார் பகுதியிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தில், உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால்; கோட்டே, கல்கிசை, வெல்லம்பிட்டியா, கொஸ்வெவ ஆகிய தொகுதிகளிலுள்ள 282,000க்கு அதிகமான மக்கள் கஷ்டத்துக்குள்ளாகினர்.

நிலைமையைச் சமாளிக்கச் சில கூட்டுறவுச் சங்கங்கள் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடமிருந்து உப்பு வாங்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. காரணம் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திலும் உப்புக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை தே!

# ஆர்ஜண்டின ஜனாதிபதி ராஜினாமா செய்தார்?

## ஆனால் மறுத்துவிட்டதாயும் வதந்திகள்

### மாளிகையைத் துருப்புகள் கைப்பற்றின

புவனஸ் அயர்ஸ், மார்ச் 29

ராஜினாமாச் செய்யும்படி ராணுவம் விடுத்த இரண்டாவது இறுதி எச்சரிக்கையையும் ஆர்ஜன்டினு ஜனாதிபதி திரு. பிரான்டிஸி நிராகரித்துவிட்டதாயும், இதனல் ஏற்படும் பின்விளைவுகளுக்கு பிரான்டிஸிதான் பொறுப்பு வகிக்க வேண்டும் என படைத்தலைவர்கள் கூறியதாயும் அறிவிக்கப்படுகிறது.

ஆனல் அவர் ராணுவத்தின் நிர்ப்பந்தம் காரணமாகப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டதாயும், அவருக்குப் பதில் சுப்ரீம் கோர்ட் நீதிமன்றத் தலைவர் ஜனாதிபதியாய் நியமிக்கப்பட்டிருப்பதாயும், வேறு செய்திகள் கூறின.

ஜனாதிபதி ராஜினாமாச் செய்யவில்லையென்றும், அவர் தம் மாளிகையை விட்டு வேறொரு இடத்திற்குச் சென்றபோது, ஜனாதிபதி மாளிகையை ராணுவம் கைப்பற்றியதென்றும், மாளிகையின் காவல் துருப்புக்கள் எதிர்த்துப் போராடவில்லையென்றும் மற்றோர் செய்தி கூறியது.

முப்படைத் தலைவர்கள் ஜனாதிபதி மாளிகைக்குச் சென்று ராஜினாமாச் செய்யும்படி கோரினர் என்றும், ஆனல் தாம் ராஜினாமாச் செய்ய முடியாது என அவர் திட்டவட்டமாகவும், உறுதியாகவும் அறிவித்துவிட்டார் என்றும், இனி என்ன நடந்தாலும் திரு. பிரான்டிஸிதான் அதற்குப் பொறுப்பு என ராணுவத் தலைவர்கள் கூறிவிட்டு வந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

## ஸிரியா பூராவும் ஊரடங்குச் சட்டம்

### ஆர்ப்பாட்டங்கள், கூட்டங்களுக்கு தடை

டமாஸ்கஸ், மார்ச் 29

ஸிரியா முழுவதும் நேற்றிரவு ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. மறு அறிவித்தல் வரை எல்லைகள் மூடப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டங்களுக்கெதிராகக் கடும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என விமானப்படைத் தலைமை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கூட்டங்களுக்கும், ஆர்ப்பாட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. புதிய லட்சியம் ஈடேறியவுடன், ராணுவம் தன் இடத்திற்குத் திரும்பிவிடும் என்றும் படைத்தலைவர்கள் அறிவித்தனர்.

### அல்ஜீரிய ராணுவ நீதிமன்றம்

அல்ஜீரியாவில் ஓ. ஏ. எஸ் பயங்கரவாதிகளையும், இதர சட்டவிரோதிகளையும் விசாரணை நடத்தி தண்டனை வழங்க இராணுவ நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## சபாநாயகர் தெரிவில் தி. மு. க. என்னசெய்யும்?

சென்னை, மார்ச் 27

தமிழ் நாடு சட்ட சபையில் 50 அங்கத்தவர்களைக்கொண்டிருந்த பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்ற கழகத்தின் கூட்டம் இன்று நடைபெற்றது. இம்மாதம் 30ந் திகதி சட்டசபை கூடி சபாநாயகர், உதவி சபாநாயகர் தெரிவு நடைபெறும்போது தி. மு. க. அங்கத்தவர்கள் எவ்விதக் கொள்கையை அனுஷ்டிக்க வேண்டுமென்பதுபற்றி ஆலோசனை நடைபெற்றது.

இது சம்பந்தமாக தகுந்த முடிவு செய்யும் பொறுப்பு சட்டசபை தி. மு. க. தலைவர் திரு. ஆர். நெடுஞ்செழியனிடம் விடப்பட்டது.

சட்ட சபையின் முதல் கூட்டத் தொடரில் ராஜ்யத்தின் போக்கு வரத்துச் சேவைகளை ராஜ்ய அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமெனக் கோரும் பிரேரணையொன்றைக் கொண்டுவருவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

### மோட்டார் சைக்கிள் பஸ் மோதல்

மக்கோன, வியாழன்

மக்கோன ஸ்ரேஷன் வீதி வழியாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று, காலியிலிருந்து வந்துகொண்டிருந்த கடுகதி பஸ் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. மோட்டார் சைக்கிள் சாரதி பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### "அரசாங்க உத்தியோகத்தையே நம்பிராதீர்"

திருக்கோணமலை, வியாழன்

"நாங்கள் அரசாங்க உத்தியோகங்களையே நம்பியிருக்கக் கூடாது. வியாபாரம், விவசாயம் ஆகிய துறைகளில் ஈடுபடநாம் முன் வர வேண்டும்" என்று காளிகோவில் வளவில் நடைபெற்ற ஏகாம்பரம் நினைவு தினக் கூட்டத்தில் செனட்டர் எம். மாணிக்கம் பேசுகையில் கூறினர்.

## உலகவலம்

### சபை விவாதம்

ஸிரியாவும், இஸ்ரேலும் ஒன்றின்மீதொன்று செய்து கொண்ட புகார் சம்பந்தமாக பாதுகாப்பு சபை விவாதத்தை ஆரம்பித்துள்ளது.

### அல்ஜீரியா

அல்ஜீரியாவில் நேற்றைய சம்பவத்தில் 5 பேர் பலியானர்கள். 6 பேர் காயமடைந்தனர்.

### முக்கிய விஷயம்

அணுசோதனைத் தடையை முதல் முக்கிய விஷயமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என இந்தியப் பிரதிநிதி திரு. எம். ஜே. தேசாய் ஜெனிவா ஆயுத பரிகரண மகாநாட்டில் கூறினர்.

### பௌதிகபீடம்

சென்னை பல்கலைக்கழகத்தில் ரூ. 3 லட்சம் செலவில் பிரபல விஞ்ஞானி ஸி. வி. ராமன் பெயரில் ஒரு பௌதிகபீடம் நிறுவப்படும்.

### தமிழ்நாட்டில் 4

3-ம் ஐந்தாண்டு திட்டத்தில் தமிழ்நாட்டில் 4 பல்கலைக்கழகங்களை நிறுவும் யோசனை பற்றி பல்கலைக்கழக செனட் பரிசீலிக்கிறது.

### ரூமேனிய கோஷ்டி

இந்தியா வந்துள்ள ரூமேனிய பார்லிமென்டரி கோஷ்டி பம்பாயிலிருந்து புதுடில்லி வந்து சேர்ந்தது. ஜனாதிபதி, உபஜனாதிபதி, பிரதமர் ஆகியோரை தூது கோஷ்டி சந்திக்கும்.

### ஆப்ரேஷன் கருவி

சென்னையில் ரஷ்ய உதவியுடன் ஆப்ரேஷன் கருவி உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்படும். இதற்கு நாலரைக்கோடி ரூபாய் செலவாகும்.

### பஞ்சாப், ஆந்திரா பிரதேசம்

பஞ்சாபிலும், ஆந்திர பிரதேசத்திலும் மேலும் இரு இயந்திரக்கருவி தொழிற்சாலைகள் அமைக்கப்படவிருக்கிறது.

### மே. இந்திய கோஷ்டி வெற்றி

மேற்கிந்தியக் கோஷ்டிக்கும், இந்தியக் கோஷ்டிக்குமிடையே பார்படோஸில் நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியக் கோஷ்டி 1 இன்னிங்ஸ் 36 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. மேற்கிந்தியக் கோஷ்டி 475 ரன்களும், இந்தியக் கோஷ்டி 1, 2-ம் இன்னிங்ஸ் முறையே 258,187 ரன்களும் எடுத்தது.

### கண்ட்ராக்டர்

சிகிச்சை பெற்று வரும் இந்திய கிரிக்கெட் கோஷ்டி காப்டன் கண்ட்ராக்டர் விமான மூலம் நியூயோர்க் கொண்டு செல்லப்பட்டு, வைத்திய பரிசோதனை செய்யப்படுவார்.

### கிருஷ்ணன் வெற்றி

பம்பாயில் நடைபெற்ற டென்னிஸ் போட்டி ஒன்றில்

## செனட்டில் டொரிக்டிசூசா வெளி நடப்பு

கொழும்பு, புதன்

செனட்சபை எதிர்க்கட்சித் தலைவர் செனட்டர் டொரிக் டி' சூசா இன்று சபையைவிட்டு வெளிநடப்புச் செய்தார்.

தாம் சபைத்தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தும் தமது உரிமை பாதுகாக்கப்படவில்லை என்ற காரணத்தினலேயே அவர் வெளிநடப்புச் செய்வதாகத் தெரிவித்தார்.

கிராமசபை திருத்தமசோதா கமிட்டிநிலையில் விவாதிக்கப்பட்டபோது செனட்டர் டொரிக் டி' சூசா பேசிக்கொண்டிருக்கையில் செனிட்டர் எம். பி. டி' சொய்சா மீண்டும் மீண்டும் குறுக்கே பேசியதைத் தொடர்ந்தே செனட்டர் டொரிக் டி' சூசா இவ்வாறு வெளிநடப்புச் செய்தார்.

பேசிக்கொண்டிருப்பவரைப் பேசவிடாது குறுக்கே பேசக் கூடாது என்றும் அவர் பேசி முடிந்தபின்னர் பேசலாமென்றும் தலைவர் பின்னர் தெரிவித்தார்.

### அரசாங்க அதிபரின சிரமதானம்

பலாங்கொடை, வியாழன்

சிரமதான இயக்கத்தின் கீழ் பலாங்கொடை பொதுமைதானத்தைத் திருத்தும் வேலையில் இரத்தினபுரி அரசாங்க அதிபர் திரு. ஏ. ஆர். ரத்னவேலுவும் அவரது பாரியாரும் ஈடுபட்டனர். இவர்களுடன் பலாங்கொடை எம். பி. திரு. சி. எஸ். ரத்வத்தை,கடவத்தை டி. ஆர். ஓ. திரு. டி. பி. வியனகெதர அவரது பாரியார் உட்படபலரும் மைதானம் திருத்தும் வேலையில் ஈடுபட்டனர்.

### சரண்புகுந்த இளமங்கை

கெப்புன்கோடா, வியாழன்

நீர்கொழும்பு பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குள் கெப்புன்கோடாவைச் சேர்ந்த 16 வயது ஒரு பெண் சரண் புகுந்தார். வெந்நப்புவிலுள்ள அநாதைகள் மடத்தில் தமக்கும் ஒரு இடம் கொடுக்குமாறு இன்ஸ்பெக்டரிடம் இந்தப் பெண் கெஞ்சி மன்றுடினர். நாவல் வாசிப்பதற்கு தமது தந்தை முட்டுக்கட்டையாக இருப்பதாகவும், ஆகையால் அநாதைகள் மடத்தில் தமக்கு ஒரு இடமளிக்குமாறும் அந்தப் பெண் கோரினர்.

இன்ஸ்பெக்டர் பெண்ணின் பெற்றோரை வரவழைத்து விசாரணை செய்தபோது, அதிகாலையிலிருந்து நடுச்சாமம் வரை தமது மகள் நாவல் படிப்பதில் நேரத்தைக் கழித்துவிடுவதாகவும், வீட்டு வேலையிலோ அன்றித் தனதுசொந்த வேலைகளிலோ அக்கறை எடுப்பதில்லையெனவும், அவரின் தந்தை தெரிவித்தார்.

பெற்றோருடன் வீட்டுக்குச் செல்லுமாறு இன்ஸ்பெக்டர் பெண்ணிடம் கூறினர்.

## பால் மாவை வானில் ஏற்றிக்கொண்டுசென்றனர்

### மூவர் கைது

ஹிங்குரக்கொட, வெள்ளி

கொள்ளைக் கோஷ்டியொன்று, கொரச என்ற இடத்திலுள்ள ரனசிங்கா வித்தியாலயத்தின், ஸ்டோர் அறையை உடைத்து, அங்கிருந்த 'கெயர்' பால்மாவுப் பெட்டிகளை வான் ஒன்றுக்குள் எடுத்துக் கொண்டு தந்திரமாக ஓட முயற்சித்த சமயம் அயலவர்கள் கூக்குரலிடவே 56 ரூத்தல் நிறையுள்ள 17 பால்மாவுப் பெட்டிகளைப் போட்டுவிட்டு அதிவேகமாக வானைச் செலுத்திக் கொண்டு கம்பி நீட்டிவிட்டனர்.

இதுசம்பந்தமாக பொலிஸாரிடம் முறையிடச் சென்ற கிராமமக்கள் சிலர், பொலிஸ் பாதுகாப்பில் குறிப்பிட்ட வானும் மூவரும் இருப்பதைக் கண்டு திகைப்புற்றனர்.

ஏ. குணதாசா, எம். கலந்தரா, ஏ. ஏ. டி. விமலதாசா ஆகிய மூவர்மீதும், இது சம்பந்தமாக தொடரப்பட்ட வழக்கு கம்பஹா அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. டி. ஜயசுந்தரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட சமயம், மாஜிஸ்டிரேட் அம்மூவரையும் ரிமான்டில் வைக்கும்படி உத்தரவிட்டு, மேல் விசாரணையை ஏப்ரல் மாதம் 2-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இராமநாதன் கிருஷ்ணன், அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நீல்பிரேஸரை 9-7, 6-3 புள்ளிகளால் தோற்கடித்தார்.

### சிரேஷ்ட பாடசாலையாக உயர்த்துக

பருத்தித்துறை, வியாழன்

புலோலி மெதடிஸ்த் தமிழ்க் கலவன் பாடசாலையின் தரத்தை சிரேஷ்ட பாடசாலையாக உயர்த்த வேண்டும் என கோரும் தீர்மானம் ஒன்று புலோலி தெற்கு அபிவிருத்தி சனசமூக நிலைய மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இப்பாடசாலையை சிரேஷ்ட பாடசாலையாக்க வேண்டிய தன் அவசியத்தை விளக்கி மகஜர் ஒன்றை தொகுதி பிரதிநிதி திரு. எம். சிவசிதம்பரத்துக்கூடாக கல்வி அமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவைப்பதனவும் முடிவு செய்யப்பட்டது.

### பஸ்விபத்தில் 24 பேர் காயமடைந்தனர்

ருவான்வெல்ல வியாழன்

கொழும்புக்கும் உடுகொடாவுக்குமிடையே சென்று கொண்டிருந்த இ.போ.ச பஸ் ஒன்று கேஹால் பன்னல என்னுமிடத்தில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது. இந்த பஸ்ஸில் சென்று கொண்டிருந்த பிரயாணிகளில் மூவருக்குப் படுகாயமேற்பட்டதை கண்டு ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இவர்களின் நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிகிறது. ஏனைய 21 பிரயாணிகளும் காயமுற்று கபகொடுவா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

### மணி வாக்கு

பிரார்த்தனையே மனிதனுக்குக் கிடைக்கக்கூடிய பேருதவி. அறிவு தவறும் போது ஒரு மனிதனுக்குத் துணை நிற்பது பிரார்த்தனையே.

— பிரம்மானந்தர்

ஈழநாடு
EELA NADU

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம பிலவ ஆண்டு பங்குனி மீ 17 உ (30-3-62)

## இ. போ. ச. சேவை

இலங்கை பஸ் சேவை தேசியமயமாக்கப் பெற்று நான்கு ஆண்டுகளாகின்றன. இந்த நான்கு ஆண்டுகளில் இலங்கைப் போக்குவரத்துச் சபை மூன்றுகோடி ரூபாய்க்கு மேல் நஷ்டமடைந்திருக்கின்றது. தனிப்பட்டவர்கள் பஸ் சேவையை நடாத்தியபோது அதிக லாபமடைந்தனர். இந்த லாபம் தமக்குக் கிடைக்குமெனவும் இதனை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உபயோகிக்கலாமெனவும் அரசாங்கம் எண்ணியதில் தவறில்லை. ஆனால் தேசியமயமாக்கிய பின்னர் பஸ் சேவை நாளுக்குநாள் நஷ்டத்துக்குள்ளாகிவருகின்றது. அரசாங்கம் எவ்வளவாகச் சிக்கனத்தைக் கையாண்டாலும் லாபம் கிடைப்பதாயில்லை.

இ. போ. ச. பஸ்சேவை பற்றி விசாரணை நடாத்திய கமிட்டி தெரிவித்துள்ள கருத்துக்களும் சிபார்சுகளும் இப்போது வெளியாகியுள்ளன. வேலைத் திறமையற்ற பெருந்தொகையான பழைய ஊழியர்களை வேலைக்கமர்த்தவேண்டிய துர் அதிர்ஷ்டமான நிலைமை இ. போ. ச. வுக்கு ஏற்பட்டிருப்பதை விசாரணைக் கமிட்டியினர் தமது அறிக்கையிற் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். திறமையற்ற பெருந்தொகையான பழைய ஊழியர்களை வைத்துக் கொண்டு நிர்வாகத்தைச் சீராக நடாத்த முடியாதென்பது உண்மையே. தவிர சம்பளவகையிலும் இவர்களுக்காக அதிகமான தொகை போய்க் கொண்டிருக்கிறன்து. தேசியமயமாக்கியபோது பழைய ஊழியர்கள் அத்தனை பேரையும் சபை ஏற்றுக் கொண்டதால் இத்தகைய இக்கட்டான நிலை இன்று சபைக்கு உண்டாகியுள்ளது. ஆகவேதான், இலங்கைப் போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் ஊழியர்களின் திறமையை அதிகரிக்கச் செய்வதற்குப் புறம்பானதொரு பகுதியை ஏற்படுத்துமாறு விசாரணைக் கமிட்டி யோசனை கூறியுள்ளது.

நேர அட்டவணையின் பிரகாரம் பஸ்கள் ஓடுவதில்லை என்ற குறையும் இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து வருகின்றது. இதனை நீக்குவதற்கு பஸ்களில் கடமையாற்றுவோர் குறித்த காலத்தில் வேலைக்குத் திரும்ப வேண்டியதன் அவசியத்தை விசாரணைக் கமிட்டி வற்புறுத்தியிருப்பது முற்றிலும் சரியே.

பொது மக்களிடமிருந்து கிடைக்கும் ஏகப்பட்ட புகார்களை விசாரித்து அவர்களின் குறைகளை உடனுக்குடன் நீக்குவதற்குப் பிரத்தியேகமான ஒரு பகுதி அவசியமென்பதை கமிட்டி வற்புறுத்தியிருப்பது வரவேற்கத்தக்கது. இ. போ. ச. நிர்வாக ஊழல்களையும் குறைகளையும் விசாரணைக் கமிட்டி நன்கு ஆராய்ந்து தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றது. அதிற் கண்டுள்ள யோசனைகளையும் சிபார்சுகளையும் இ. போ. ச. அமுலுக்குக் கொண்டுவருமாயின் ஊழியர்களின் திறமை அதிகரிப்பதுடன் நிர்வாகச் செலவுகளும் குறையுமென எதிர்பார்க்கலாம்.

இச்சந்தர்ப்பத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பஸ் பிரயாணிகள் படும் கஷ்டங்களையும் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். இப்பகுதிகளில் போதியளவு பஸ்கள் இல்லாத காரணத்தால் பிரயாணிகள் நீண்ட நேரம் பஸ் நிலையங்களிற் கால் கடுக்க நிற்க வேண்டியிருக்கின்றது. காரியாலயங்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் போக வேண்டியவர்கள் இதனால் தினமும் அல்லற்படுகின்றனர். இதைப் பற்றி முன்னரும் பல சந்தர்ப்பங்களில் இங்கு எழுதியிருந்தோம். இ. போ. ச. இதிற் கவனம் செலுத்திப் பிரயாணிகளின் சிரமங்களைக் குறைக்குமென நம்புகின்றோம்.

# மேற்கு இரியான் விஷயமாக யுத்தம் நடைபெறுமா?

— ஷீ. ஷென்பிங் —

இப்போது தகராறில் இருக்கும் மேற்கு இரியானுக்கு அருகில் டச்சு யுத்தக் கப்பல்களுடன் இந்தோனேஷிய படகுகள் கைகலந்தன. டச்சுக்காரர்கள் வசமுள்ள ஒரு பிரதேசத்தின்மீது நடைபெற்ற படையெடுப்பில் இந்தோனேஷிய படகுகளுக்குச் சம்பந்தமில்லை என்று மேற்கு இரியான் விடுதலைப் போராட்டத் தளபதி மேஜர் ஜெனரல் அஹமது ஜெனி கூறினர். மேற்கு இரியான் பிரச்சினைமீது பேச்சுவார்த்தை நடத்த இன்னும் அரசாங்கம் தயாராக இருப்பதாக டச்சுப் பிரதமர் திரு. ஜான் டிகுவே அறிவித்தார். "இந்தோனேஷியா மேலும் ஆக்கிரமிப்பில் ஈடுபடும் என்பதற்கான அறிகுறிகள் கிடையா" என்று டச்சு பாதுகாப்பு அறிக்கை ஒன்று கூறுகிறது. இதனால், மேற்கு இரியானில் இவ்விரு நாடுகளில் எதுவும் யுத்தத்தை விரும்பவில்லை என்று தெரிகிறது. அதிபர் சுகர்னோ தமது ஆயுட்காலத்திற்குள் இந்தோனேஷியாவில் பூரண ஐக்கியத்தை ஏற்படுத்த விரும்புகிறார்.

### இரு எதிர்ப்புச் சக்திகள்

இந்தோனேஷிய சர்வாதிகாரம் கம்யூனிஸ்ட் ஆதரவையே பெரிதும் நம்பியுள்ளது. அதிபரின் தேசியவாதிகள் கட்சி ஆரம்பத்தில் இரண்டு எதிர்ப்பான சக்திகளைக்கொண்டிருந்தது. ஒன்று முன்னாள் துணை அதிபர் ஹாடா தலைமையிலான மிதவாதிகள்; மற்றொன்று சுகர்னோ தலைமையிலான தீவிரவாதிகள். கடந்த 1956, 57-ல் மிதவாதிகளிடமிருந்து சுகர்னோ பிரிந்து கம்யூனிஸ்டுகள் சார்பில் சேர்ந்தார். உடனே ஹாலந்து எதிர்ப்பு இயக்கம் துவக்கப்பட்டது. பின்னர் சுமத்திரா, செலிபஸ் தீவுகள் சாப்ரோடின் மற்றும் பல ராணுவ அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட கலக நடவடிக்கைகள் தோல்வியடைந்ததும் சுகர்னோவின் கை ஓங்கியது? 1960-ல் முஸ்லிம், சோஷலிஸ்டுகள் கட்சி அரசாங்க உத்தரவால் கலைக்கப்பட்டன. இப்போது இந்தோனேஷிய கம்யூனிஸ்டு கட்சி இந்தோனேஷியாவில் மிகப் பலம் பொருந்திய அரசியல் கட்சியாக இருக்கிறது. உள்நாட்டு விவகாரத்தைப் பொறுத்தவரை, கம்யூனிஸ்டுகள் கூட்டுறவு சுகர்னோவிற்குப் பெரும் அபாயமாக இருக்கவில்லை. ஏனென்றால் அவர் தமது படைப்பலத்தைக் கொண்டு கம்யூனிஸ்டுகளைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள முடியும். பொருளாதார ரீதியில் நீண்டநாள் யுத்தத்தை இந்தோனேஷியா தாக்குப் பிடிக்காது.

### உணவுப் பிரச்சினை

நாட்டோ, சீட்டோ வல்லரசுகள் சம்பந்தப்படும் சர்வதேச யுத்தம் ஏற்பட்டால் அபாயம் உண்டு. இந்தோனேஷியாவில் உள் நாட்டு யுத்தம் ஏற்பட்டதால்தான் தேசிய பொருளாதாரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உணவும், உடையும் பெரும் பிரச்சினையாகிவிட்டன. அரிசி முதலிய உணவு விலைகள் ஏறிவிட்டன. மொத்தம் எவ்வளவு கரன்ஸி செலாவணியில் இருக்கிறது என்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால் அதன் மதிப்பு குறைந்து கொண்டே வருவதை அனைவரும் அறிவர். உற்பத்தி குறைந்து வருவது பெரும் பிரச்சினையாகிவிட்டது. சீனி உற்பத்தி சுயதேவையைப் பூர்த்தி செய்கிறது. ஆண்டுதோறும் மூன்றரை லட்சம் டன் சீனியை இந்தோனேஷியா ஏற்றுமதி செய்கிறது.

கொப்பரு உற்பத்தி 1960' 61-ல் பாதியாகக் குறைந்து விட்டன. ரப்பர் ஏற்றுமதி 1951-ல் 8 லட்சம் டன்களாக இருந்தது. 1960-ல் 5,77,000 டன்களாகக் குறைந்துவிட்டது. தேயிலை, காப்பி, புகையிலை, பனை, எண்ணை, மிளகு ஆகியவற்றின் மொத்த ஏற்றுமதி 20 சத விகிதமாகக் குறைந்துவிட்டது. கடந்த 1960-ல் இந்தோனேஷியா வெளிநாடுகளில் 10 டாலருக்கு அரிசி வாங்கியது. 1961-ல் இது இன்னும் அதிகரித்தது. இராணுவ ரீதியிலும் இந்தோனேஷியா ஒரு யுத்தத்திற்குத் தயாராகவில்லை. மேற்கு இரியானில் உள்ள ஹாலந்து ராணுவ பலம் இந்தோனேஷிய ராணுவ பலத்தை விட குறைந்தது என்றபோதிலும், ஏழாவது அமெரிக்கக் கடற்படையின் உதவியினால் அதை முறியடிக்க முடியும்.

### விவசாயப் பிரதேசம்

மேற்கு இரியானை வைத்துக் கொள்ள ஹாலந்து விரும்புகிறது. என்பதில் ஐயமில்லை. ஆனால் அதற்காக யுத்தம் செய்ய அது விரும்பவில்லை. மேற்கு இரியான் என்று இந்தோனேஷியர்களாலும், மேற்கு நியூகினி என்று டச்சுக்காரர்கள் கூறப்படும் அந்தப் பிரதேசம் 1,60,618 மைல்கள் கொண்டது. 7 லட்சம் மக்கள் வசிக்கும் இந்தப் பிரதேசத்திற்கு மேற்கு பாப்புவா என்று டச்சுக்காரர்கள் மறு பெயர் சூட்டினர். விவசாயப் பிரதேசமான அங்கு விவசாயமே முக்கிய தொழில். ஒரு கோடி வெள்ளி மதிப்புள்ள கனிப் பொருட்களும் அங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. ஐ. நாவின் கீழ் சுயாட்சிப் பிரதேசமான மேற்கு இரியானை மாற்றும் ஹாலந்து முயற்சி ஐ. நா.வில் ஆசிய ஆபிரிக்க நாடுகளால் தோற்கடிக்கப்பட்டது. மேற்கு இரியானுக்கு சுதந்திரம் வழங்கும் அடிப்படையில் பேச்சு நடத்த ஹாலந்து தயாராக இருக்கிறது. ஆனால் ஆட்சி உரிமையைத் தங்களுக்கு மாற்றிவிடுமாறு இந்தோனேஷியர் கூறுகின்றனர். மேற்கு இரியானில் இராணுவ நடவடிக்கை எடுப்பதை அமெரிக்கா எதிர்க்கிறது. நாட்டோ மூலம் ஹாலந்தும், சீட்டோ மூலம் ஆஸ்திரேலியாவும் அமெரிக்காவிற்கு கூட்டாளிகள். கிழக்கு இரியான் கம்யூனிஸ்டுகளால் தாக்கப்படும் எனப் பயந்தால் அமெரிக்காவை ஆஸ்திரேலியா உதவிக்கு அழைக்கும். அதிர்ஷ்டவசமாக கம்யூனிஸ்டுகளின் போக்கை அதிபர் சுகர்னோவும், ஜெனரல் நசூதியானும் நன்கு அறிந்துள்ளனர். ஐ. நா பொதுக் காரியதரிசி யு தான்டும் சமரச நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

# கோயில்கள்மீது வரிவிதிப்பு பழைய கொள்கைக்கு மாருனது

## மகாநாயகதேரோக்கள் கண்டனம்

கண்டி, வியாழன்

"வருமானவரி திருத்த மசோதாவின் கீழ் கோவில்கள் மீதும் தேவாலயங்கள் மீதும் விதிக்கப்படவிருக்கும் வரிகள் இரண்டாயிரமாண்டுகளாக இருந்துவந்த பழைய கொள்கைக்கு முரணனவை விநாயச் சட்டங்களுக்கும் சாசனக் கொள்கைகளுக்கும் சாதாரண நீதிக்கும் இந்த வரிவிதிப்பு முரணனது" இவ்வாறு மல்வத்தை அஸ்கிரிய மகாநாயக்கதேரோக்கள் இருவரும் கூறியுள்ளார்கள். அரசாங்கத்தின் செய்கைக்கு ஆர்ப்பாட்டம் செய்யுமுகமாக இவர்கள் இவ்வாறு ஆட்சேபனை தெரிவித்துள்ளார்கள்.

வரி வசூலிக்கும் யோசனையை உடனடியாகவே கைவிடும்படி அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, திரு. மைத்திரிபால சேனநாயக்கா, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, மகாதேசாதிபதி ஆகியோருக்குத் தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளார்கள்

# அம்பாந்தோட்டையில் 6பேருக்கு இளம்பிள்ளைவாதநோய்

சிலாபம், வியாழன்

மாதன்குளம் என்ற இடத்தைச் சேர்ந்த 12 வயதுள்ள சிறுமியொருத்தி இளம் பிள்ளை வாத நோயினுல் பீடிக்கப்பட்டிருக்கிறார் எனச் சந்தேகித்து, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் இவரை பல டாக்டர்கள் பரிசோதித்தனர். அச்சிறுமி இளம்பிள்ளை வாத நோயினுல் பீடிக்கப்படவில்லை. அவருக்கு வேறு நோய் கண்டிருக்கிறது என்பது தெரியவந்தது.

அம்பாந்தோட்டையில் வாத நோயினுல் ஆறு பேர் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அம்பாந்தோட்டை மாவட்ட வைத்திய அதிகாரி கண்டுபிடித்துள்ளார். இவர்களைவிட வேறு சிலருக்கும் வாத நோய் கண்டிருப்பதாக தகவல்கள் கிடைத்திருக்கிறது.

இங்கு இதுவரை ஊட்ட மருந்து எதுவும் கிடைக்கவில்லை.

### மொரட்டுவையில் ரஷ்ய மருந்து

மொரட்டுவை, வியாழன்

ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு மருந்து, இங்குள்ள பாடசாலைகள் மூலமாகவும், சிகிச்சை நிலையங்கள் மூலமாகவும் பிள்ளைகளுக்கு வழங்கப்படுகிறது.

# 2-வது லோகசபை

புதுடில்லி, மார்ச் 29

இன்னும் இரண்டு தினங்களில் முடிவடையும் இந்தியக் குடியரசின் இரண்டாவது மக்கள்சபை, பெருமைப்படத்தக்க பணியாற்றியிருக்கிறது என்பது, மக்கள்சபை, காரியாலயம்வெளியிட்டுள்ள சுவையான தகவல்கள் நிறைந்த ஒரு பிரசுரத்தின் மூலம் புலனுகிறது.

இந்த மக்கள்சபையில் 300க்கு மேற்பட்ட மசோதாக்கள் நிறைவேறியுள்ளன. நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு சம்பந்தப்பட்ட அந்த மசோதாக்களை நிறைவேற்றியதோடு தேசிய சர்வதேசப் பிரச்சினைகள் சம்பந்தமாக முக்கியமான விவாதங்களையும் நடத்தியிருக்கிறது.

மொத்தம் 16 தொடர் கூட்டங்கள் நடந்திருக்கின்றன. அவற்றின் காலஅளவு 771 நாட்கள் அல்லது இரண்டு ஆண்டு, 47 நாட்கள். இதில் இடையில் வந்த லீடுமுறை நாட்களைக் கழித்தால் சபை உண்மையில் கூடிய நாட்கள் 581.

அரசியல் சட்டத் திருத்தத்திற்காக நான்கு மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் ஒன்று, கோவா, டையூ, டாமன் ஆகிய முன்னுள் போர்ச்சுக்கீசிய பகுதிகளை இந்தியாவுடன் இணைப்பதற்காகச் செய்யப்பட்ட அரசியல் சட்டத் திருத்தம்.

### வரதட்சணை தடைசட்டம்

சமூக வாழ்வு பற்றிய சட்டங்களில் முக்கியமானது வரதட்சணை தடை சட்டமாகும். இச்சட்டத்தின் சில திருத்தங்கள் சம்பந்தமாக, மக்கள் சபைக்கும் ராஜ்ய சபைக்கும் கருத்து வேற்றுமை நிலவியதால், கடைசியாக கூட்டுக் கூட்டத்தில் மசோதா நிறைவேறியது.

மக்கள் சபையில் உறுப்பினர்களின் சராசரி வயது பற்றிய தகவல் தரப்பட்டிருக்கிறது. அதன்படி, முதல் மக்கள் சபையில் சராசரி வயது 45 வருடம் 8 மாதமாக இருந்தது. இந்தச் சபையில் 46 வருடம் 4மாதமாக அதிகரித்திருக்கிறது. முதல் சபையில் 50 முதல் 55 வரை வயதுள்ளவர்களின் எண்ணிக்கை தான் மற்ற வயது கட்ட உறுப்பினர்களை விட அதிகமாக இருந்தது. இப்போதைய சராசரி வயது அதிகம் என்றாலும், இச்சபையில் வேறு எந்தக் கட்ட வயதுள்ளவர்களைக் காட்டிலும் 35-40 வயதுக்காரர்கள் தான் அதிகமாக உள்ளனர்.

### வக்கீல் ஆதிக்கம்

உறுப்பினர்களை அவரவர் தொழில்வாரியாகப் பிரித்துப் பார்த்தால், வழக்கறிஞர்கள் தான் சென்ற சபையில் போன்றே இச்சபையிலும் மிகுந்திருக்கின்றனர். ஆனால், மொத்த உறுப்பினர்கள் அவர்களது சதவிகிதம் 35.6 லிருந்து 30.3 ஆகக் குறைந்துவிட்டது. விவசாயிகளின் சதவிகிதம் 22.1 ஆக முன்பு இருந்தது. இப்போது 29.1 ஆக உயர்ந்திருக்கிறது. வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் சதவிகிதம் 12 லிருந்து 10.2 ஆகக் குறைந்து விட்டது. ஆசிரியர்கள் விகிதம் 9.9 லிருந்து 11.3 க்கு உயர்ந்துவிட்டது.

### அவசரப்பிரேரணைகள்

15 வது தொடர் கூட்ட முடிவுவரை நோட்டீஸ் வரதரப்பட்ட அவசரப் பிரேரணைகள் 1262 இதில் 502 சபை முன் கொண்டுவரப்பட்டன. ஆனால் மூன்றே மூன்று தான் விவாதத்திற்கு அனுமதிக்கப்பட்டன. அவற்றில் இரண்டு விவாதத்திற்குப் பிறகு நிராகரிக்கப்பட்டன. இன்னென்று சபையின் அனுமதியோடு வாபஸ் பெறப்பட்டது.

# இரவு 11 மணிக்குப்பின் சினிமா காட்சிகள் கூடாது

## ரசிகர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் மேயர் யோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

"சினிமாக் காட்சிகள் இரவு 11 மணிக்குப் பின்னர் இருப்பது அறவே கூடாது. சினிமாவைப் பார்த்துவிட்டு தெருவிலும் திண்ணையிலும் தூங்கக்கூடாது. அவரவர் வீட்டிலேயே ஒவ்வொருவரும் தூங்கவேண்டும். இப்படியான மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டால் திருந்திய வாழ்வுக்கு வழியேற்படும்."

இவ்வாறு யாழ்ப்பாணம் மேயர் திரு. எம். யேக்கப் யாழ்ப்பாணம் 'பாம்கோர்ட்' விருந்தினர் இல்லத்தில் இலங்கை சினிமா ரசிகர் சங்க யாழ்ப்பாணக்கிளையை அங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு சினிமா ரசிகர்கள் பலரும் சமுகமளித்திருந்தனர்.

திரு. யேக்கப் தொடர்ந்து பேசியதாவது:-

வாழ்க்கையின் அடிப்படை அம்சத்தை அடித்தளமாகக் கொண்டே சினிமா தயாரிக்கப்படவேண்டும். மக்கள் சினிமாத்துறையில் அதிகம் ஈடுபடவேண்டுமென்ற திரு.பாலச்சந்திரனின் ஆர்வம் வாழ்க்கையில் சினிமா ரசிகர்கள் வந்தவுடன் சினிமா உலகை அவர்கள்தான் உயர்த்த லாயக்கானவர்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இன்பக்கலையை ரசிப்பதற்கு இடமில்லை. ஆனால் இந்த இன்பக்கலையில் வாழ்வின் அடிப்படை மறந்துபோனால்தான் கெடுதி ஏற்படுகிறது. இந்த வகையில் சினிமாவைச் செப்பனிடவேண்டும்.

இலங்கையில் சினிமாத் துறையைப் பார்க்குமிடத்து இந்தியாவிலிருந்து நடிகர்களை எதிர்பார்ப்பதைவிட இந்தியா இலங்கை நடிகரை எதிர்பார்க்கும் காலம் மிகவிரைவில் வரும் என எதிர்பார்க்கலாம்.

இச் சங்க அங்குராப்பண அழைப்பாளரான திரு. கே. பாலச்சந்திரன் சங்கத்தின் நோக்கங்களை எடுத்துரைத்துவிட்டு மேலும் பேசியதாவது:-

தமிழ் சினிமா வாழ்வின் ஒரு அம்சமாகிவிட்டது. தமிழ் சினிமா பார்ப்பதில்லையென்று ஒதுங்கக்கூடாது. மனித அறிவுக்கும் மனித தேவைக்கும் உதவும் நிலையில் சினிமா இருந்துவருகிறது.

நடிகர்களை ரசிகர்கள் பாராட்டினால்தான். நடிகர்கள் முன்னேறுவார்கள்.

இந்திய நடிகர்கள் சிலருடன் ரசிகர்கள் தொடர்பேற்படுத்திக்கொள்ளவேண்டுமானால் அவரது அந்தரங்கக் காரியதரிசி மூலமே தொடர்பேற்படுத்த வேண்டியுள்ளதாக பலரும் குறைப்படுகிறார்கள். இதுபற்றி அண்மையில் இலங்கை சினிமா ரசிகர் சங்கம் முறையீடு செய்துள்ளது. இது பற்றி தென்இந்தியா ரசிகர் சங்கமும் நடவடிக்கையெடுக்கும் எனஎதிர்பார்க்கிறோம். நடிகர்களுடன் பொதுமக்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்படவேண்டும்.

திரு. எஸ். எம். ஏ. ஏ. சி. ஈ. காதர், திரு.கே.என். கணபதிப்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

உத்தியோகத்தர் தேர்தலின் போது போஷகர்களாக திருவாளர்கள் ஏ. டி. துரையப்பா எம். பி. கிலையரசு சொர்ணலிங்கம், பி. நிக்கலஸ், எம். யேக்கப், ஆகியோரும் தலைவராக திரு. ஏ. ஜி. இராசசூரியரும், உபதலைவர்களாக திரு. பி. எஸ். சித்தம்பலம், திரு. டி. டொலாம்ஸ் ஆகியோரும், பொதுக்காரியதரிசியாக திரு. எம். ஏ. சி. எஸ். ஏ. காதரும் உபகாரியதரிசியாக திரு. கே. என். கணபதிப் பிள்ளையும், சமுக சேவைக் காரியதரிசியாக திரு. எம். கந்தையாவும், தனாதிகாரியாக திரு. எம். நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. பாலச்சந்திரன் நன்றி கூறினார்.

# இ. போ. ச. இயக்குதுறை தலைவர்

கொழும்பு, வியாழன்

இ. போ. ச. வின் இயக்குதுறைத் தலைவராக திரு. ஈ. பி. டி. சேரம் இ. போ. ச. டைரக்டர்களால் நியமிக்கப்பட்டுள்ளார். இப்போது திரு. சேரம் கண்டிமாவட்டத்தின் இ. போ. ச. மனேஜராகக் கடமையாற்றி வருகிறார்.

இ. போ. ச. இயக்குதுறைத் தலைவராக இதுவரை காலஞ்சென்ற திரு. ஈ. விச்ரமசிங்கா இருந்துவந்தார். திரு. விக்ரமசிங்காவுக்கு முன்னர் திரு. ஈ. கிரேனியர், திரு. பி. ஆர். தேவராஜன் ஆகிய இரு சிவில் சேவையாளர்களும் இந்தப் பதவியிலிருந்து வந்தார்கள்.

# கந்தசாமி கோயில் திருவிழா

நீர்வேலி, வியாழன்

நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த திருவிழா ஏப்ரல் 1-ந் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகும். ஏப்ரல் 18-ந் திகதி தேர், 19-ந் திகதி தீர்த்தம், 20-ந் திகதி பூங்காவனம் ஆகியவற்றுடன் முடிவடையும். திருவிழாக்காலங்களில் அன்னதானம், கூட்டுப்பிரார்த்தனை ஆகியன நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கொடியேற்று வைபவத்தை பிரம்மஸ்ரீ க. இராஜேந்திரக்குருக்கள தொடங்கி வைப்பார்.

# 70,000 விட்டமின் மாத்திரைகள் கெட்டிருக்கின்றன

கொழும்பு, வியாழன்

பொரளை லேடிறிட்ஜ்வே ஆஸ்பத்திரியிலுள்ள ஸ்டோரில், 70,000 விட்டமின்மாத்திரைகள் கெட்டுப் போய்க்கிடக்கின்றன. இருந்தபோதிலும் இந்த மாத்திரைகளை உபயோகிக்கலாமென்று ஆஸ்பத்திரி அதிகாரிகள் கொழும்பு ஆஸ்பத்திரிகள் சுப்பிறிண்டனுக்கு தெரிவித்துள்ளனர்.

இது பற்றி கொழும்பு ஆஸ்பத்திரிகள் சுப்பிறிண்டன், அந்த விட்டமின் மாத்திரைகளை, ஆஸ்பத்திரியிலுள்ள 'தமது குழந்தைகள்' உபயோகிக்கத் தாம் அனுமதிக்கமாட்டார் என்று லேடி றிட்ஜ்வே ஆஸ்பத்திரி அதிகாரிகளிடம் கூறியுள்ளதாகத்தெரிகிறது.

இது சம்பந்தமாக ஆஸ்பத்திரி அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் அந்த விட்டமின் மாத்திரைகள் அழிக்கப்படுமென்றும், குறிக்கப்பட்ட காலத்தில் உபயோகிக்காமல் ஆஸ்பத்திரியில் அளவுக்கு மீறி இம் மாத்திரைகள் சேமித்துவைக்கப் பட்டுவிட்டன என்றும் கூறினார்.

# கார் விபத்தில் இளம் தம்பதிகள்

பையகலை, வியாழன்

புதிதாக மணமான ஒரு இளம் தம்பதிகளை ஏற்றிச் சென்ற கார் ஒன்று, ஆறு வயது சிறுமியுடன் மோதியதில், சிறுமி ஸ்தலத்திலேயே மரணமானார்.

கார் சாரதியை அளுத்கம பொலிசார் கைது செய்துள்ளனர்.

# கடையை உடைத்து களவாட முயன்றனர்

## மூவர் கைது

கொழும்பு, வியாழன்

பல தடவைகள் களவுக் குற்றஞ் செய்த இருவரும், 16 வயதுப் பையன் ஒருவரும் கோட்டைப் பொலிஸாரால் சென்ற திங்கட்கிழமையன்று கைது செய்யப்பட்டனர். பிறின்ஸ் வீதியிலுள்ள பெரிய 'ஸ்டோர்' ஒன்றை உடைத்து களவாட முயன்ற சமயத்தில் பொலிஸார் இவர்களைக் கண்டு பிடித்தனர்.

இந்த மூவரையும் ஏற்றி வந்த 'டாக்ஸி' ஒன்றில் கைக்கவசங்களும், சுத்தியலும், ஸ்க்றூடிரைவர்களும், மின்பொறி விளக்குகளும் இருக்கக் காணப்பட்டன. புறக்கோட்டையிலுள்ள ஏனைய கம்பெனிகளிலும் இவர்கள் சமீபத்தில் திருடியுள்ள பொருட்கள் சில பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டன.

புறக்கோட்டையிலுள்ள கடைகளில் இரவு நேரங்களில் களவாடிவந்த திருடர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே இந்த மூவரும் எனப் பொலிஸ் நம்புகிறது. மூவரும் புறக்கோட்டை கூட்டு மாஜிஸ்டிரேட் முன்னிலையில் நேற்று கொண்டு செல்லப்பட்டனர். விசாரணை முடியும்வரை அவர்களை ரிமாண்டில் வைத்திருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# அகில இலங்கை பேனு நண்பர் கழகம்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை பேனு நண்பர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று "விஜிதாசன்" தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது அவர் ஆற்றிய தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

"இன மத ஜாதி வேறுபாடின்றி இயங்கி வரும் இக்கழகத்தின் 7-வது ஆண்டு எதிர் வரும் மே மாதத்துடன் ஆரம்பமானதை நினைக்குந்தோறும் பெருமிதப்படுகிறேன். நாட்டின் சுபிட்சத்திற்காக ஒவ்வொரு பிரஜையும் பாடுபடுவதையே இலட்சியமாகக் கொண்டால் உண்மையில் இரண்டு மூன்று வருடங்களிலேயே நாம் மற்றைய நாடுகளின் கண்ணோட்டத்திற்கு இலக்காகி விடலாம். ஒரு இனத்தை நசுக்கி மற்றொரு இனம் வாழ வேண்டும் என்ற குறுகிய நோக்குப் படைத்த அரசாங்கம் கூட மண் கவ்விவிடும். எத்தனையோ சிங்களச் சகோதர சகோதரிகளைக் கொண்ட இக்கழகம் இதுவரை எவ்வித இனப்பூசலுக்கும் இடமளிக்காததைப் போலவே மேலும் இயங்க வேண்டும் என்பதே என் பேரவா."

இவ்வருட ஆண்டு விழாவினை முத்தமிழ் விழாவாக எதிர் வரும் ஜூன் மாத மத்தியில் மட்டக்களப்பில் நிகழ்த்துவதென்றும் அவ்விழாவிற்கு சினிமா நட்சத்திரங்களான ஆனந்தன் (விஜயபுரிவீரன்), கெ. ஏ. தங்கவேலு, மாலினி ராகவன், ரி. எஸ். பாலையா ஆகியோரை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

இறுதியில் இவ்வருட உத்தியோகஸ்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: ரி. கணேசலிங்கம் எம். ஏ., உபதலைவர்: வி. சி. சின்னத்தம்பி, பி. எஸ். சி. செயலாளர்: "விஜிதாசன்", உபசெயலாளர்: திருமதி உ. விஜயலட்சுமி, தனாதிகாரிகள்: இரா. கணேசன், செல்வி தமிழ்க்கன்னி. நிர்வாகசபை உறுப்பினர்கள்: ஆர். நடராஜன், செல்விகுகப்பிரியை, திரு. கமலதாசன், திரு. செழியன், திருமதி கோமதி மனோகரன் பி. ஏ., செல்வி பூரவி நடராஜன், செல்வி ரீடா ரத்னபக்கா.

# சதி வழக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து வழக்கைத் தயார்செய்யும் வேலையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடைய வேலையில் அவர்களை அவசரப்படுத்த நான் விரும்பவில்லை. இதுவரை நடைபெற்ற புனர் விசாரணை, கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதா நிறைவேற்றப்பட்டது போன்ற வேலைகளில் இடையூறு ஏற்படுவதை நான் விரும்பவில்லை.

**தாமதம் இருக்கக் கூடாது**

சதி வழக்கு விசாரணையில் தாமதம் இருக்கக் கூடாது என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். தடுப்புக்காவலிலுள்ளவர்களின் நிலைமையையிட்டு வழக்கு விசாரணையில் அனாவசியமான தாமதம் ஏற்படக் கூடாதென்பதே அரசாங்கத்தின் விருப்பம். வேலைகள் முடியவேண்டும். அதுவும் திருப்திகரமாக முடிவடையவேண்டுமென்பதற்காகவே காத்திருக்கிறோம்.

# 6 விவசாய பண்ணைகள் ஆரம்பிக்க முடிவு

கொழும்பு, வியாழன்

ஆறு அரசாங்க விவசாயப் பண்ணைகளை ஆரம்பிக்க விவசாய, காணி, நீர்ப்பாசனமந்திரி திரு. சி. பி. டி' ஸில்வா விரைவில் அரசாங்கத்திடம் அனுமதி கோருவார் எனத்தெரிகிறது.

தற்பொழுது, பெலவத்தை என்ற இடத்தில் 1,000 ஏக்கர் பரப்பைக் கொண்ட ஒரு அரசாங்கப்பண்ணைதான் இருக்கிறது. அதிகமாக விவசாயப் பண்ணைகளை ஆரம்பிப்பதன் மூலம், ஆண்கள், பெண்கள் உட்பட, மேசன் தொழில் செய்பவர்கள், தச்சுத்தொழில் செய்பவர்கள் யாபேருக்கும் வேலை கிடைத்துவிடும் எனத் தெரிகிறது.

# கிராம சேவகர்கள் நியமனம்

## கமிஷன் அங்கீகரித்ததும் நடைபெறும்

கொழும்பு, வியாழன்

அரசாங்க சேவைக் கமிஷன் தனது அங்கீகாரத்தைத்தெரிவித்துக் கொண்டதும் உள்நாட்டமைச்சு கிராமசேவகர்களை நியமனம் செய்யும்.

கிராம சேவகர்கள் மேற்கொள்ளவேண்டிய கடமைகள் பொறுப்புக்கள் யாவை என்பதை வரையறை செய்து ஒரு புத்தகம் தயாரிக்குமாறு உள்நாட்டமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா. ஆலோசனை கூறியுள்ளார்.

இப்பேற்பட்ட புத்தகம் ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாயும், கிராமசேவகர்கள் நியமனம் பெற்றுக்கொள்ளும் போது இதுவும் வழங்கப்படலாம் எனவும் உள்நாட்டமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

உள் நாட்டமைச்சு கிராம சேவகர்களைஏற்கனவே தெரிவு செய்துள்ளதென்றும்அரசாங்க சேவைக் கமிஷனிடம் தெரிவுகளை அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்துள்ளதென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். அங்கீகாரம் விரைவில் கிடைத்தால், முன் கூறியதுபோல ஆகஸ்டிலேயே நியமனம் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தாக்கி, தாலிக்கொடியை அபகரித்தார்களாம்

## எதிரிகள் பிணையில் விடுதலை

தெல்லிப்பழை, வியாழன்

மயிலிட்டியைச் சேர்ந்த மூத்தான் பூதன், மூத்தான் கிட்டினன் ஆகியோர் மீது கடந்த வருஷம் ஜூலை மாதம் 19-ம் திகதியன்று அதே ஊரைச் சேர்ந்த வைத்திலிங்கத்தின் மனைவி செல்லம்மாவைத் தாக்கி அப் பெண்மணியின் 900 ரூபா பெறுமதியான தாலிகொடியை அபகரித்ததாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி டி. தாமோதரம் முன்னிலையில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்டது. செல்லம்மா சாட்சியமளிக்கையிற் கூறியதாவது:-

"சம்பவம் நடைபெற்ற தினத்தன்று இரவு 9 மணியளவில் எனது குழந்தையுடன் வீட்டில் இருந்தேன். அப்போது எனது வீட்டில் கற்கள் வீசப்படும் சத்தம் கேட்டது. நான் வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தேன். இரு எதிரிகளும் வீட்டுக்குமுன் நின்றுகொண்டு உன்னுடைய கணவன் எங்கே" என்று கேட்டனர். அதேசமயத்தில் முதலாம் எதிரி எனது வயிற்றில் காலால் உதைத்தார். நான் கீழே விழுந்தேன் இரண்டாம் எதிரி எனது கழுத்திலிருந்த தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு ஓடினர். தாலிக்கொடியின் பெறுமதி 900 ரூபாவாகும். முதலாம் எதிரியும் ஓட்டம் பிடித்தார். நான் சத்தமிடவே எனது கணவரும் தம்பையா என்பவரும் எதிரிகளைத்துரத்திச் சென்றனர். ஆனால் அவர்களால் எதிகளைப் பிடித்துக்கொள்ளமுடியவில்லை. சம்பவம் நடைபெற்றபோது நான் கர்ப்பிணியாகவிருந்தேன். நான் காங்கேசன்துறைப் பொலிசாரிடம் இச்சம்பவம் பற்றிப் புகார் செய்தேன். பின் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். என்னைப்பரிசோதனை செய்த டாக்டரிடம் கழுத்தில் வலியிருப்பதாகக் கூறினேன்.

நீதிபதி இரு எதிரிகளையும் தலா ஆயிரம் ரூபா பிணையிற் செல்லுமாறு உத்தரவிட்டு மேல் விசாரணையை அடுத்த மாதம் 23-திகதி வரை ஒத்தி வைத்தார்.

# புதிய பண்ணை

கொழும்பு, வியாழன்

ஆயுள்வேத வைத்தியசபையின் வேண்டுகோளின் பெயரில் ஹோறனையில் ஆயுள்வேத மருந்து மூலிகைகள் வளர்ப்புப் பண்ணை ஒன்றைத் திறந்துவைக்க காணி விவசாய இலாக ஒழுங்குகள் செய்து வருகிறது.

# ஆயுள்வேத நிலையங்களில் நிபுணர்கள் உதவி

## வைத்தியசபை செய்துள்ள ஒழுங்கு

கொழும்பு, புதன்

ஆயுள்வேத சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருபவர்கள் நிபுணர்களின் சேவையை இலவசமாகவே பெற்றுக்கொள்வதற்கு ஆயுள்வேத வைத்தியர்கள் சபை ஒழுங்குகள் செய்துள்ளது.

சுமார் 100 ஆயுள்வேத நிபுணர்கள் ஆஸ்பத்திரிகளில் விசேஷ சிகிச்சை வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளார்கள்.

நோயாளி தமக்கு விருப்பமான நிபுணரைத் தேர்ந்து அவரிடம் சிகிச்சை பெறலாம் எனவும், நிபுணருக்கானசெலவுகளை ஆஸ்பத்சாலயே பெறுப்பேற்கும் எனவும் ஆயுள்வேத வைத்திய சபை அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருக்கும் போது கொழும்பு ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி மாணவர்களுக்கு நிபுணர்கள் விரிவுரையாற்றுவார்கள் எனத் தெரிகிறது.

நிபுணர்களில் பலர் தூர இடங்களிலிருப்பதாகவும் நோயாளிகள் அவர்களுடைய இடங்களுக்குச் செல்லமுடியாதிருந்ததென்றும், நிபுணர்களும் நோயாளிகளின் இல்லங்களுக்கு செல்லமுடியாதிருந்ததென்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

## திருக்கேதீஸ்வர ஆலயம்

### அலங்காரோத்சவ விழா

கொழும்பு, புதன்

வருகிற (4-4-62) தொடக்கம் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதருக்கு விசேட நவகலச ஸ்நபன அபிஷேக பூசை வைபவங்களுடன் ஆலங்காரோத்சவ விழா 16 நாட்களுக்கு நடைபெறும். 4-4-62 முதல்நாள்விழா அன்று ஈழத்தின் இருகண்களில் ஒன்ருய் விளங்கும் கோணேச்சரப் பெருமானின் "பாவநாசக" தீர்த்தத்தைதிருக்கோணமலைச் சைவ அடியார்கள் பக்திபூர்வமான ஆராதனைகளுடன் திருக்கேதீச்சரம் கொண்டுவந்து, கௌரி அம்பாள் சமேத திருக்கேதீச்சரநாதருக்கு அபிஷேசம் செய்விப்பார்கள் தொடர்ந்துவரும் 15 தினங்களிலும் மேற்படி பூசை, அபிஷேகம், திருவிழாக்களை இலங்கையில் தமிழ்ப் பகுதிகளிலுள்ள பல சைவ அடியார்களும், இந்துக்கல்லூரிகளும் பொறுப்பேற்று நடாத்துவார்கள். 19-4-62 பகல் தீர்த்தத் திருவிழாவுடனும், இரவு பூங்காத் திருவிழாவுடனும் விழாக்கள் முடிவடைகின்றன.

## சன சமூக நிலைய 8-ம் ஆண்டுக்கூட்டம்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் நாவலர் சனசமூக நிலைய 8-ம் வருடாந்தக் கூட்டம் ஆசிரியர் க. தம்பிராசா தலைமையில் நடைபெற்றது. காரியதரிசி தனதிகாரி ஆகியோரது அறிக்கைகள் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப் பட்டன. பின்னர் நடப்புவருட உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. ச. நடேசபாதன் தலைவர், திரு.க. இந்திரராசா உப தலைவர், திரு. த. இராசரத்தினம் காரியதரிசி, திரு சு. கணேசன் உப காரியதரிசி, திரு. சி. அருணசலம் தனதிகாரி, திரு. சி. சிவராம் உப தனதிகாரி, திரு. நா. சேனதிராசா, திரு. க. தம்பிராசா (ஆசிரியர்), திரு. சி. அருணசலம், ஆகியோர் சொற்பொழிவாற்றினர். காலஞ்சென்ற கலைப்புலவர் திரு. க. நவரத்தினம் அவர்களின் ஆத்மா சாந்திக்காக இரு நிமிஷ நேரம் மௌனம் அனுஷ்டிக்கப் பட்டது.

# தனிப்பட்ட ஸ்தாபனம் வழங்கிய உபகாரச்சம்பளம்

## வைத்தியர்கள் ஆட்சேபம்

கொழும்பு, புதன்

இலங்கையிலுள்ள வெளிநாட்டு ஸதாபனம் ஒன்று அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியிலுள்ள வைத்தியர் ஒருவருக்கு வெளிநாடு செல்வதற்கான உபகாரச் சம்பளம் வழங்கியுள்ளது.

அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஏனைய வைத்தியர்கள் பிரஸ்தாப வைத்தியரை, குறித்த ஸ்தாபனம்தேர்ந்தெடுத்ததற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள். சுகாதார இலாகாவிலுள்ள மனநோய்நிபுணர்களில் பிரஸ்தாப நிபுணர் சேவை குறைந்தவரெனவும், இவருக்கு உபகாரச் சம்பளம் வழங்குவதுபற்றி சுகாதார இலாகாவுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்றும் ஏனைய வைத்தியர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள். இலாகா ஆலோசனை கேட்டிருந்தால் வைத்தியர்களின் சேவைக் காலத்தை இலாகாகவனித்து அதற்கேற்ப உபகாரச்சம்பளம் பெறவேண்டியவரைத் தேர்ந்தெடுத்திருக்குமென அவர்கள் கூறியுள்ளனர்.

இதுவிஷயம்பற்றிச் சுகாதார அமைச்சிடம் ஏனைய வைத்தியர்கள் பிரஸ்தாபிக்கவிருக்கிறார்கள். வெளிநாட்டு ஸ்தாபனங்கள் சரியல்லாத முறையில் ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் சமயத்தில் சுகாதார இலாகா கண்டிப்பாக இருக்கவேண்டுமென வைத்தியர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

## படுகாயம் விளைவித்ததாய் வழக்கு

பருத்தித்துறை, வியாழன்

வேலன் வல்லி என்பவரை தடியால் அடித்து படுகாயம் விளைவித்தாக குற்றம் சாட்டி புலோலியைச் சேர்ந்த வ. பரம்சோதி, ஆ. சின்னத்தம்பி, வ. பரமநாதன் ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி 1-ம் எதிரிக்கு 2 மாதமும் 2-ம் 3-ம் எதிரிகட்கு 2 வாரமும சிறைத்தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கினர்.

# "அழகான வீடு கட்டுவேன் சிறு கடை போடுவேன்"

## சுவீப்பில் பரிசு பெற்றவர் ஆனந்தம்

கொழும்பு, புதன்

ஆஸ்பத்திரி சுவீப் இல. 171-ல், இரண்டவது பரிசுத்தொகையான ரூ 35,850 தோட்டத் தொழிலாளியான வில்லியம் என்பவருக்குக் கிடைத்துள்ளது.

மூன்று குழந்தைகளுக்கு தந்தையான வில்லியம், பட்டுவத்தையிலுள்ள தோட்டமொன்றில் வண்டிக்காரனுகக் கடமையாற்றுகிறார். சுவீப் டிக்கட் வாகுவதில் எப்போதும் தவருத வில்லியம், கேகாலை ஆஸ்பத்திரியிலுள்ள தமது நண்பரொருவரைப் பார்க்கச் செல்லும்வழியில் இந்த அதிர்ஷ்ட டிக்கடடை வாங்கினர்.

இதுபற்றி வில்லியம் கூறுகையில், பரிசுப்பணத்தைக் கொண்டு தாம் ஒரு சிறு கடை போடப்போவதாகவும், தமது குழந்தைகளுக்கு நல்ல கல்வியளிக்க திட்டமிடப்போவதாகவும் கூறினர். அழகான வீடொன்றைக் கட்டி அதில் ஆனந்தமாக குடியிருப்பது தமது அடுத்த் திட்டமென்றும் வில்லியம் கூறினர்.

சுவீப் இல. 171-ல் முதற் பரிசுத் தொகையான ரூபா 71,700ஐ (டிக்கட் இலககம் 24 V 0928) நேற்று எவரும் சேரவில்லை. இந்த டிக்கெட் கொழும்பு மத்தியில் விற்பனை செய்யப்பட்டது. மூன்ருவது பரிசுத் தொகையான ரூபா 17,925 சிறைச்சாலைப் பகுதியில் 'கார்ட்'டாக கடமையாற்றும் திரு. எம். பி. பாலசூரியா என்பவருக்குக் கிடைத்திருக்கிறது.

## நேப்பாள மன்னர் இந்திய விஜயம்

காட்மாண்டு, மார்ச் 27

நேப்பாள மன்னர் மகேந்திரர் அடுத்த மாதம் 18-ம் திகதி புதுடில்லிக்கு விஜயம்செய்வார். இந்தியாவில் அவர் ஐந்து நாள் தங்கியிருப்பார். நேப்பாள—இந்திய உறவு சம்பந்தமாக பிரதமர் நேருவுடன் அவர் பேசுவார்.

## கழுத்தில் சுருக்கிட்டு பெண் மரணம்

யாழ்ப்பாணம், புதன்

மனநோயால் பாதிக்கப்பட்டிருந்த விதவை ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார். கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை கைம்பெண் இராசலட்சுமி (வயது 65) அவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் சகோதரரின் மனைவியான செல்வநாயகம் வீரலட்சுமி சாட்சியமளிக்கையில் இறந்தவர் உடற்சுகவீனமாகவும் மனநோயினுலும் பாதிக்கப்பட்டிருந்ததாகவும், தான் சம்பவம் நடைபெற்ற அன்று ஆஸ்பத்திரிக்குச் சென்று திரும்பியபோது அவர் கழுத்தில் சுருக்கிட்டு இறந்து கிடக்கக் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. வயித்தியலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினர்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## வைசூரிக்கு 3 மாதத்தில் மூவர் பலி

சென்னை, மார்ச். 27

இம்மாதம் 11-ந் திகதியுடன் முடிவடைந்த 3 மாத காலத்துக்குள் மதுரை மாவட்டத்தில் 20 பேருக்கு வைசூரி கண்டதாகவும் மூவர் மாண்டதாகவும் அறிவிககப்பட்டது. நோய் பரவாமல் தடுக்கப்பட்டுவிட்டதென்றும் 20,000 பேர்களுக்கு அம்மைப்பால் கட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மதுரை நகரத்தில் வைசூரி நோய் ஏற்படவில்லையென்றும் அறிவிக்கப்படுகிறது.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் காற்சட்டைகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள் : ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம் : ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட். மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/113

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.)

வெள்ளி, 30-3-62

காலை 6-45 உதய கீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 7-45 எம். சிவராஜா பக்திப் பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 கோவில் அஞ்சல், 7-30 நேயர் விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 ருக்மணி விசுவநாதன் பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15.)

வெள்ளி, 30-3-62

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 ர. சுப்பையா பிள்ளை, எஸ். பி. ராஜு பிள்ளை நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க மாணர் நிகழ்ச்சி.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 காந்தி கதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கானமுக்தாவளி (சென்னை அஞ்சல்) 9-15 பலகணி, 9-30 சத்தியப் பூங்குழல், 9-45 இசைமாலை.

---

## உலக வங்கியின் நிதி உதவி

கொழும்பு, வியாழன்

சர்வதேச நிதிக் கார்ப்பரேஷன் மூலமாக, உலக வங்கி, இலங்கைக்கு உதவி செய்யவிருக்கிறது.

இலங்கைபோன்ற புதிய அபிவிருத்தி நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி பெறுவதற்கு உதவும் முகமாக, உள்நாட்டு அபிவிருத்தி வங்கிகளில் பணத்தை முதலீடு செய்வதற்கு உலக வங்கி முன்வந்துள்ளது.

சர்வதேச நிதிக் கார்ப்பரேஷன் மூலமாக, அபிவிருத்தி தேவைபபடும் நாடுகளின் உள்ளூர் வங்கிகளில் பணம் முதலீடு செய்வதற்கேற்ப உலக வங்கி சட்ட நகல்களில் சமீபத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் இடங்கொடுக்கின்றன.

---

## தூதுகோஷ்டி பிரயாணம் தடை

கொழும்பு, வியாழன்

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குச் செல்லவிருந்த கொழும்பு நகரசபை அதிகாரிகள் தூதுகோஷ்டியின் பிரயாணம் தடைப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் செலாவணி பெற்றுக் கொள்வதில் கஷ்டம் ஏற்பட்டதால் பிரயாணம் தடை செய்யப்பட்டுள்ளது.

---

## தற்காலிகம் நிரந்தரமாகிறது

கொழும்பு, வியாழன்

மேலதிகமான உத்தியோகஸ்தர்கள் என்று கூறி வேலையிலிருந்து நிற்பாட்டப்பட்ட இ. போ. சபையின் தற்காலிக சேவையாளரைத் திரும்பவும் இ. போ. சபையில் வேலைக்கு அமர்த்திக்கொள்ள சபை தீர்மானித்துள்ளது.

தொடர்ந்து இவர்களை நிரந்தர சேவையில் அமர்த்துவதென இ. போ. ச. தீர்மானித்துள்ளது.

---

## வருடாந்த விளையாட்டுப் போட்டி

காத்தான்குடி, வியாழன்

நாவற்குடா, அரசினர்சிரேஷ்டபாடசாலை இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி சித்திரை மாதம் 5-ம் திகதி நடைபெற இருக்கிறது.

மாணவர்கள் விபுலானந்த இல்லம்,. சுத்தானந்த இல்லம் தருமரெத்தினம் இல்லம் என மூன்று பிரிவுகளாகப் பிரிந்து போட்டியில் பங்கு கொள்கிறார்கள்.

மரதன் ஓட்டமுட்பட பல கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகள் இப்போட்டியில் இடம்பெறுகின்றன.

---

## காட்டுக்குள் பிரேதம்

### தற்கொலை காரணமாம்

தெரணியாகலை, வியாழன்

மக்கல்லி என்ற இடத்தைச் சேர்ந்த டி. வி. பொடி அப்புஹாமி என்பவர் ஒரு காட்டுக்குள் இறந்துகிடக்கக் காணப்பட்டார். மரண விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. டபிள்யு. ஈ. ரணசிங்கா தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்

யின்போது, இறந்தவர் பொடி அப்புஹாமி என்பவருக்குச் சொந்தமான கடை ஒன்றில் வேலை பார்த்தவர் என்பது தெரியவந்தது.

---

## 11 வயதுச் சிறுமியின் பரிதாப மரணம்

கொச்சிக்கடை, வியாழன்

சின்டறியா றேமன் கத்தோலிக்க பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த பதினொரு வயதுள்ள சி. வெறோனிக்கா பெர்ணன்டோ என்ற சிறுமி, வாய்க்கால் என்ற இடத்திலுள்ள 25 அடி ஆழமான சகதிநிறைந்த குழியில் மூழ்கி மரணமானார்.

பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் வழியில். வெறோனிக்காயும், வேறு நான்கு சிறுமிகளும் குளிக்கச் சென்றனரென்றும், சிறிது நேரத்தில் அவர்கள் எல்லோரும் சகதியில் அமிழ்ந்து கஷ்டப்பட்டனரென்றும் அதைக்கண்ட ஒருவர் அயலார்களுடன் குறித்த இடத்துக்குச் சென்று நால்வரைக் காப்பாற்றினரென்றும் வெறோனிக்காவின் உடல், இரண்டு மணிநேரம் தாமதித்து சேற்றிற்கடியில் கிடந்து எடுக்கப்பட்டதென்றும் கூறப்பட்டது.

---

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று, கடைக்காரரின் மனைவியுடன் சச்சரவு பட்டுக்கொண்டு நிம்மதியற்ற மனத்துடன் வெளியேறினர் என்றும், இறந்தவர், காதல் தொடர்பு வைத்திருந்தாரென்றும், விசாரணை

## லைசன்ஸ் இன்றி வானொலி சேவை

### விமானத்தில் உபயோகிக்கப்பட்டது

கொழும்பு, புதன்

கட்டுநாயக்கா விமான நிலையத்துடன் இரகசிய வானொலி மூலம் அடிக்கடி தனிப்பட்ட முறையில் தொடர்பு கொண்டதாக விமானத்தின்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரசாங்கத்திடமிருந்து முன்னதாகவே அனுமதி பெற்றுக் கொள்ளாமல் விமானம் வானொலி சேவையை நடத்த முடியாது என போஸ்மாஸ்டர் ஜெனரல் திரு. டி. சிவப்பிரகாசம் கூறியுள்ளார்.

வானொலி சேவைகளை நடாத்துபவர்கள் அரசாங்கத்திடமிருந்து லைசென்ஸ் பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் போஸ்மாஸ்டர் ஜெனரல் தெரிவித்துள்ளார்.

வானொலி சேவைக்கு வேண்டிய உபகரணப் பகுதிகளை வைத்திருப்பதற்கு மட்டும் பிரஸ்தாப விமானத்துக்கு லைசென்ஸ் இருந்ததென்றும் ஆனால் அந்த லைசென்ஸைச் சட்டத்துக்கு மாறாக விமானம் உபயோகித்துள்ளதென்றும் தந்தி போக்குவரத்து இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். சட்டத்தைச் சரியாகத் தெரிந்துகொள்ளாததால், வானொலி சேவைக்கு உபகரணங்களை உபயோகித்துவிட்டதாகக் கூறி விமானம் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளதென்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

---

## கோவில்பரிபாலனசபையின் வருடாந்தக் கூட்டம்

எழுவைதீவு, வியாழன்

எழுவைதீவு ஸ்ரீ சங்கரமூர்த்தி முருக மூர்த்தி கோவில் பரிபாலன சபையின் 11-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் சென்ற ஞாயிற்றுக்கிழமை திரு. நா. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது கீழ்க்கண்டவர்கள் புதுவருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் நா. சங்கரப்பிள்ளை, உபதலைவ: மு. கணபதிப்பிள்ளை, காரியதரிசி: ஐ. கனகசபை, உபகாரியதரிசி: செ. மார்க்கண்டு, தனாதிகாரி: வை. ஆறுமுகம், ஏனைய உறுப்பினர்கள் திருவாளர்கள்: ஐ. ஆ. இராமசுவாமி, ஐ சங்கரப்பிள்ளை, சி. நடராசா, சி. வைரமுத்து.


26%

நீண்டகால உபயோகத்திற்கு

புதிய எவரெடி ரேடியோ பாட்டரிகள்




★ இலங்கை எங்கும் இப்பொழுது கிடைக்கும்.

★ புகழ் மிக்க புதிய எவரெடி மினிமாக்ஸ் ரேடியோ பாட்டரி.

★ 26% அதிக சக்தி உள்ளவையாகையால்........ நீண்டகால உழைப்புக்கு உகந்தவை.

கவர்ச்சிகரமான சிவப்பு, நீல வர்ணமுள்ள கவர்களையுடைய புதிய எவரெடி மினிமாக்ஸையே பார்த்து வாங்குங்கள்!

தங்க நிறமுடைய அடையாள முத்திரை இருக்கிறதா என்றும் பார்த்து வாங்குங்கள்! அதுவே பாட்டரி விற்பனைக்கு முதல் பரீட்சிக்கப்பட்டதற்கு அத்தாட்சி.

உத்தரவாத அடையாளம் தங்க நிற முத்திரை. அதை அவதானித்து வாங்குங்கள்!

தங்க நிற அடையாள முத்திரைதான் உத்தரவாத அடையாளம்.

★ ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் 4-00 — 4-30 மணிக்குமிடையில் நடைபெறும் எவரெடி இசைக்களஞ்சியம் நிகழ்ச்சியைக்கேட்டு ரசியுங்கள்.

# கொழும்புக் கல்லூரிகள் வெற்றியீட்டின

## யாழ்ப்பாணத்தில் பாஸ்கட் பந்தாட்டப் போட்டி ஆரம்பம்

யாழ்ப்பாணம், வெள்ளி

1962-ம் ஆண்டுக்கான 4வது அகில இலங்கைப் பாடசாலைகளின் பாஸ்கட் பந்துவிளையாட்டுப் போட்டி நேற்றுமாலை 5-30 மணிக்கு மத்தியகலூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

மின்சார ஒளியில்நடைபெற்ற நேற்றைய விளையாட்டுப் போட்டியில் சென். பீட்டர்ஸ் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சென். மைக்கல் கல்லூரி, சென். ஜோசப் கல்லூரி, ரோயல் கல்லூரி, சென். சுசபஸ்தியான் கல்லூரி, சென். பெனடிக்ஸ் கல்லூரி, சென். அந்தோனியார் கல்லூரி ஆகிய கல்லூரிகள் பங்கெடுத்துககொண்டன.

கொழும்பு சென். பீட்டர்ஸ் கல்லூரிக்கும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சென் பீட்டர்ஸ் கல்லூரி 51 கோல்கள் போட்டு வெற்றிபெற்றது. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 37 போட்டது. சென். மைக்கல் கல்லூரிக்கும், சென். ஜோசப் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் கொழும்பு சென். ஜோசெப் கல்லூரி 35ம், மட்டக்களப்பு சென். மைக்கல் கல்லூரி 25-ம் பெற்றன.

கொழும்பு ரோயல் கல்லூரி மொரட்டுவ சென். செபஸ்தியான் கல்லூரியுடன் விளையாடிய போது ரோயல் 36போட்டு வெற்றிபெற்றது. சென்.செபஸ்தியான் 31 கோல்கள் போட்டது. கொழும்பு சென். பெனடிக்ஸும், சென். அந்தோனியாருக்குமிடையே நடைபெற்ற போட்டியில் சென். பெனடிக்ஸ் 63 கோல்கள்போட்டது. கண்டி சென்.அந்தோனியார் 18கோல்கள் போட்டது.

சென். பெனடிக்ஸுக்கும் சென். அந்தோனியாருக்கு மிடையே நடைபெற்ற போட்டி மிகவும் நல்லமுறையில் அமைந்தது எனக்குறிப்பிடலாம். சென். பெனடிக்ஸ் கல்லூரி சார்பில் விளையாடியவீரர்கள் துரிதமாகவும் லாவகமாகவும் கோல்களைப் போட்டது ரசிக்கும்படியாக இருந்தது.

கொழும்பு கல்லூரிகளே இந்த விளையாட்டில் திறமையாக விளங்குகின்றனவென்பது போட்டிகளின் முடிவிலிருந்து அறியக் கூடியதாகவிருக்கிறது.

இந்த விளையாட்டுப்போட்டிகளுக்கு திருவாளர்கள்: எஸ். கதிர்காமத்தம்பி, எஸ். பரமநாதன், அசோகசந்திரசோமா, டி. பி. நாதன் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக கடமையாற்றினர்கள்.

இன்று நடைபெறும் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, சென். செபஸ்தியான் கல்லூரி, சென். அந்தோனியார் கல்லூரி, சென மைக்கல்ஸ் ஆகிய கல்லூரிகள் கலந்துகொள்கின்றன.

இறுதி ஆட்டத்துக்கான ஆயத்தப் போட்டியில் சென் பீட்டர்ஸ், ரோயல், சென்.பெனடிக்ஸ், சென். ஜோசப்ஸ் ஆகிய கல்லூரிகள் கலந்துகொள்ளும்.

## தேசிய ஒருமைப்பாட்டுக்கு விளையாட்டு உதவுகிறது

### —டாக்டர் தம்பையா

யாழ்ப்பாணம், வெள்ளி

'கலந்து உறவாடி ஒற்றுமையை வளர்க்க விளையாட்டுக்கள் பெரிதும் உதவுகின்றன."

இவ்வாறு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையாசியு.ஸி. நேற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறற அகில இலங்கைப் பாடசாலைகளின் பாஸ்கட் பந்து விளையாட்டுப் போட்டியை ஆரப்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்

டாக்டர் தம்பையா தொடர்ந்துபேசுகையில்கூறியதாவது:- தென்பகுதி வடபகுதி இப்படிப் பல்வேறு பகுதிகளை ஒற்றுமைப்படுத்தி ஐக்கிய இலங்கையை உருவாக்க இத்தகைய விளையாட்டுப் போட்டிகள் உதவும் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. நாம் ஒற்றுமையாய், இருந்தால்தான் நாடு முன்னேற்றமையுடம். இவ்விதம் பலபகுதிகளிலுள்ளவர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி விளையாடுவதால் ஒருவரைப் பற்றி மற்றவர் அறியக்கூடிய வாய்ப்பிருக்கிறது. தவறான எண்ணங்களைப்போக்கி நல்ல சூழ்நிலையை உருவாக்க இத்தகைய விளையாட்டுக்கள் வழிவகுக்கின்றன.

மத்திய கல்லூரி அதிபரும் பாஸ்கட் விளையாட்டுப் போட்டியின் நிர்வாகசபைத் தலைவருமாகிய திரு. ஏ. ஈ. தம்பர் பேசியதாவது:

யாழ்ப்பாணத்தில் இந்தப் போட்டி நடத்த ஏற்பாடு செய்வதற்கு உதவிய சகலரும் பாராட்டப்படவேண்டியவர்கள். பல்வேறு பாடசாலைகளும் பங்குபற்றும் இந்தப் போட்டி தேசிய ஒற்றுமையையும் நல்லுறவையும் வளர்க்கும்.

## பிரசித்த ஏலவிற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

**இல: 6833.**

துன்னாலை தெற்கு 1. ஏரம்பமூர்த்தி கைம்பெண் இளைதங்கம் 2. ஏரம்பமூர்த்தி மகள் தெய்வநாயகி 3. ஏரம்பமூர்த்தி மகள் தங்கராணி.

இரண்டாம் மூன்றும் வழக்காளிகளுக்கு முதலாம் வழக்காளி பராபரிப்புக்காரி. **வழக்காளிகள்.**

துன்னாலை தெற்கு 1. கந்தர் கார்த்திகேசு, தனித்தும் காலம்சென்ற கந்தையாவின் பெண் இலட்சுமியின் தத்துவகாரனாகவும், 2. வேலு நடேசு 3. பெண் சின்னப்பிள்ளை 4. கதிரேசு மகாலிங்கம் 5. கதிரேசு நல்லதம்பி 6. கதிரேசு செல்லத்துரை மறுநாமம் சுப்பிரமணியம் 7. இராமு கந்தையா. **எதிரிகள்.**

மேற்கூறிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும்எனக்கும் கோட்டால் 1962-ம் ஆண்டு பங்குனி மீ 2-ம் திகதி அனுப்பப்பட்ட கொமிஷன் அதிகாரப்படியும் 1962-ம் ஆண்டு சித்திரை மீ 11-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனங்கள் இடமாக நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வடமர்காணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோவிற்பற்று துன்னாலை வீரசுந்தரமுதலிக் குறிச்சியிறை வேலுவாயபுலம் நிலப்பரப்பு 32-ல் மேற்குப் புறமாக நிலப்பரப்பு 14-ல் வடக்குப்புறமாக நில்ப்பரப்பு $3\frac{1}{2}$ புற நீங்கலாக மீதி நிலப்பரப்பு $10\frac{1}{2}$-ல் வடக்குப்புறமாக நிலப்பரபு 2 நீக்கி மீதி தெற்குப்புறமாக நிலப்பரப்பு $8\frac{1}{2}$. பனைகள் வடலிகள் வேம்புகள் வீடு கொட்டில்களும். எல்லை: கிழக்கு சடையர் வல்லிபுரம் பெண் இலட்சுமிக்கும் மறுபேருக்குமுடையவாதனம். வடக்கு வல்லிபுரம் மகள் சின்னப்பிள்ளைக்குரியவாதனம். மேற்கு வேலர் சிதம்பரப்பிள்ளை கனகசபைக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு வெள்ளைவாய்க்கால் இதில் அடங்கலில் சொரியலாய் புன்னிரண்டில் பதினொருபங்கும். விற்பனவு நேரம்: முற்பகல் 10 மணிக்கு.

மேற்படி கரவெட்டி வென்றிக்குறிச்சியிறை சிங்கத்தினவல புலம் நிலப்பரப்பு 48. திடலவபுலம் நிலப்பரப்பு 70 ஆக நிலப்பரப்பு 118-ல் ஆட்சிப்படி நிலப்பரப்பு $1\frac{1}{2}$. எல்லை: கிழக்கு முருகர் கதிரேசுவுக்கும் மறுபேருக்கு முடையவாதனம். வடக்கு ஆழ்வார் இராமுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். மேற்கு தில்லைநடராசா பெண் இரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடையவாதனம். தெற்கு நாகர்வேலு நடேசுவுக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இதனடங்கலில் சொரியலாய் $\frac{11}{12}$ பங்கு. விற்பனவுநேரம்: மு. ப. 11 மணிக்கு.

### அறவிடவேண்டிய தொகையின் விபரம்.

தீர்வைத்தொகை ரூபா 2120. இதில் ரூபா 1300-க்கு 4-10-60 தொடக்கம் 25-10-61 வரைக்கும் 8 வீத வட்டி ரூபா 105. அதன்பின் முழுத்தொகைக்கும் 25-10-61 தொடக்கம் 2-3-62 வரையும் 5 வீத வட்டி ரூபா 40. இன்னும் ரூபா 1926,00-க்கு 2-3-62 தொடக்கம் முழுத்தொகையையும் கட்டும்மட்டும் 5 வீதப்படி அறவிடப்படும். செலவுபணத்தில் ஒருபகுதி ரூபா 150. இந்தக்கொமிஷனுக்கு முத்திரைச் செலவு ரூபா 6. முழுச்செலவுபணத்தின் தொகையைக் கட்டி மிகுதிச்செலவு அறவிடப்படும்.

வடலிப்பாதி
தும்பளை
பருத்தித்துறை,

ஆ. சபாரத்தினம்
வெந்திசு மேஸ்தர்
24-3-62

### தேவை

யாழ்ப்பாண பஸ் நிலையத்துக்கு அண்மையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கந்தோரில் கடமையாற்ற இரு பெண் குமாஸ்தாக்கள் தேவை. கடிதத் தொடர்புகள், தட்டெழுத்து அனுபவமுடையோர் விரும்பத்தக்கத. விண்ணப்பங்கள் 10-4-62 வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

விலாசம். குமாஸ்தாக்கள் 1|3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# தொழிலாளர் பற்றிய தஸ்தாவேஜுகள்

## 4 வருடங்களுக்கு வைத்திருக்கவேண்டும்

### புதிய சட்டம் வருகிறது

ஜனப்பிரதிநிதிகள் சபை இன்று பிற்பகல் சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல தலைமையில் கூடியபோது, கிரிமினல் சட்ட (விசேஷ விதிகள்) மசோதாவுக்கு கவர்னர் ஜெனரல் அங்கீகாரமளித்த செய்தியை சபாநாயகர் சபையில் வாசித்துக் காட்டினர்.

இதன்பின் சம்பள நிர்ணய சபைச் சட்டத்திருத்த மசோதாவொன்றை தொழில் தேசிய சேவைகள்மயமந்திரி திரு எம். பி. டி. இசட். சிறிவர்த்தன சமர்ப்பித்தார்.

தொழிலாளரின் சம்பளப் பட்டியல், வரவுஇடாப்பு மற்றும் தொழிலாளர் சம்பந்தப்பட்ட தஸ்தாவேஜுகளை இப்பொழுதுள்ளதுபோல் இரண்டு வருடகாலத்துக்குமட்டும் பாதுகாத்துவைக்காமல் நான்கு வருடங்களுக்கு முதலாளிமார் பாதுகாத்துவைக்க வேண்டுமென்பது இத்திருத்த மசோதாவின் ஒரு அம்சம்.

ஒரு தொழிலாளி தனக்கு தனது முதலாளி சம்பளம் கொடுக்கவில்லையென்பதை நிரூபித்துக்காட்டும் காலஎல்லையை இரண்டு வருடங்களிலிருந்து நான்கு வருடங்களுக்கு நீடிப்பதும் தனது முதலாளிக்கு எதிராக தனது நிலைமையை எடுத்துக் கூறுவதற்கு இப்போதுள்ள இரண்டு வருடகால எல்லையை நான்கு வருடங்களுக்கு நீடிப்பதும் இந்த மசோதாவின் மற்றொரு அம்சமாகும்.

—

## உப்பு விலை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

றேன்" என்றுதிரு. ஜயசிங்கா கேட்டார்.

இதற்கு உணவு அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினர்:-

தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள உணவுப்பொருள்கள் தாராளமாகக் கிடைக்கச் செய்வதற்கு முயற்சி செய்யப்படுகின்றன. விரைவில் குறிப்பாக இப்பொழுது நிறுவப்பட்டுவரும் மூன்று பெரிய லடோர்களின் வேலைகள் பூர்த்தியடைந்ததும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டு நிலைமையில் நிச்சயமான அபிவிருத்தியேற்படும்."


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

பல வீரதீரச் செயல்கள் நிறைந்த சிறந்த கலர் படம்!

பார்த்து பரவசம் அடையுங்கள்!



சித்ரா அசரத் கிருஷ்ணகுமாரி நடித்த

ஜிம் போ

(தமிழ், முழுநீள கேவா கலர்ப் படம்)

மனோகரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30 க்கு

சிவாஜி, பண்டரிபாய் நடித்த கண்கள்

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும்

சாலி சப்ளின் நடித்த

கோல்ட் றஸ் (GOLD RUSH)

(ஆங்கிலம்)


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 30-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது